உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி–௩அ.] விக்கிரம௵ தை௴ [பகுதி–௩.

Vol. 38. January—February 1941. No. 3.

## பரதாழ்வான்வைபவம்

[37-ஆம் தொகுதியின் ௩௪0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இவ்வாறு கைகேயியைக் கடுஞ்சினங்கொண்டு சீறிக் கடுமொழிகூறிநின்ற பரதாழ்வான், சிறிது சினம் தணிந்து, அவளை இழித்தற்குறிப்பால் வெறுத்து, வைவதைச் சொல்லக்கருதிய மஹாகவி, அவன்பேச்சாலே,

> "நோயீரல்லீர் நுங்கணவன்றன் உயிருண்டீர்
> பேயீரேநீர் இன்னம் இருக்கப்பெறுவீரே
> மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
> தாயீரே நீர் இன்னம் எனக்கென் தருவீரே" என்கிறார்.

இதனுள், நோயீரல்லீர் என்றதன்கருத்து, நீ (உயிர்கொல்லும் ஒப்புமையால்) சக்கரவர்த்தியைக் கொல்லவந்ததொரு நோய் போலத் தோன்றுகிறாயே! நோயாயிருந்தாயாகில் ராஜவைத்தியர்கள் வந்து வீரபாஷாண சூர்ணாதிகளை ஊட்டியும், கூர்வாளால் வெட்டியும் கீறியும், தீக்கோலாற் சுட்டும் உன்னைப் போக்கியிருப்பார்கள். அங்ஙனம் போக்கப்படாமையாலே நீ நோயாயிருந்தாயுமில்லையே: என்பதாம். நோயினும் கொடியையாயுள்ளாய்: என்றபடி பன்மை இழித்தற்குறிப்பு.

நும் கணவன்றன் உயிருண்டீர் பேயீரே நீர் என்றதன்கருத்து, ஓராண்மகனிடத்தில் பெண்மகள்போல வேடங்கொண்டுவந்து காமவின்பமும் கசிந்துநுகர்ந்து அவ்வாண்மகனையும் கொல்லவல்லதொரு மோகினிப்பிசாசாயுள்ளாய்: என்பதாம்.

13 A

இன்னம் இருக்கப்பெறுவீரே! என்றதன்கருத்து, அத்தகைய உயிர்கொல்லிப்பேயும் அதன் இஷ்டசித்தியானவுடனே மறைந்து தொலைந்துபோய்விடும். நீயோ அங்ஙனம் மறைந்து தொலைந்து போகாமல் இருக்கின்றாய்; அதனால் இன்னம் என்ன கேடுவிளைவிக்கக் கருதியிருப்பாயோ தெரியவில்லையே!: என்பதாம்.

மாயீர் என்றதன்கருத்து, நீ இக்கொடும்பழிக்கு நாணித் தானேயும் மாய்ந்தாயில்லை; என்பதும், உன்னை மாய்க்குந்திறம் ஒன்றும் இல்லாமையாலே பிறராலும் மாய்க்கப்பட்டாயில்லை: என்பதும் ஆம்.

மாயா வன்பழி தந்தீர் என்றதன்கருத்து, பகவதபசாரம்செய்து மாயாதிருக்கும் நீ எனக்குத்தந்த பகவதபசாரபாத்திரன் என்னும் வலிய பழியும் பரிகரிக்கவொண்ணாமையாலே மாயாதாயிற்றே: என்பதாம்.

முலைதந்தீர் என்றதன்கருத்து, எனக்குக் கேடு கருதிய நீ முன்னமே என்னை நஞ்சூட்டிக் கொன்றிருந்தாயாகில் நலமாயிருக்குமே. அங்ஙனம் நஞ்சூட்டிக் கொல்லுதலால் இத்தனை கேடு விளையாதென்று கருதியோ அந்நஞ்சினும் கொடிய உன் முலைப்பாலூட்டிவளர்த்து இக்கேட்டை அடைவித்தாய்?: என்பதும், உன் முலைப்பாலுண்டமையால் நானும் எனக்கு என்ன கேடு விளைவித்துக்கொள்வேனோ? என்பதும் ஆம்.

இதனால், ஆசிரயதுஷ்டமான அந்நபாநாதிகள் அநர்த்தகரம் என்பது குறிப்பாயிற்று.

தாயீரே நீர் என்றதன்கருத்து, இத்தனை கேடுவிளைத்த நீ உன் புத்தியாலே உன்னை எனக்கு அநுகூலம்செய்த தாயாகவே நினைக்கிறாய்; என் புத்தியாலே எனக்கு நீ தாயாவாயோ? சத்துருவேயாவை: என்பதாம்.

இன்னம் எனக்கு என்தருவீரே? என்றதன்கருத்து, நீ இன்னும் இருந்துகொண்டிருப்பதை நோக்குங்கால், இன்னமும் ராஜ்யாதிபத்தியம் முதலான கொடிய பல கேடுகளை எனக்குத் தரக் கருதிக் காத்திருப்பதுபோலத்தோன்றுகிறது; எனக்கு அதனினும் பெரிய கொடியகேடு பிறிதொன்றில்லாமையாலே அதனை நான் அடையவே மாட்டேன்; அதனால் எனக்கு நீ தாக்கருதிக் காத்திருப்பது

வீணுகும்: என்பதும், இதுகாறும் நீ தந்த கேட்டினும் நீ இனித் தரக்கடவ பெரிய கேடு பிறிதொன்றும் இல்லை: என்பதும் ஆம்.

இன்னும்,

"ஒன்றும் பொய்யா மன்னனை வாயால் உயிரோடும்
தின்றும் தீரா வன்பழி கொண்டும் திருவெய்தி
என்றும் நீரே வாழ வுவந்தீர் அவனேகக்
கன்றும் தாயும் போவன கண்டும் கழியீரோ"

என்கிறூர்.

இதனுள், ஒன்றும் பொய்யாமன்னனை என்றதன்கருத்து,

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" என்றும்,

"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்றும் சொலனும்படி தருமங்களெல்லாவற்றினும் சிறந்த வாய்மையென்னும் நல்வினையை மேற்கொண்டொழுகிய சக்கரவர்த்தியை: என்பதாம்.

வாயால் உயிரோடும் தின்றும் என்றதன் கருத்து, உன்வாயின் வன்சொல்லாகிய தீவினையாலே உயிரொழியச்செய்தாய் என்பதும், அவன்மேற்கொண்டிருந்த வாயால் (வாய்மையென்னும் நல்லறத்தையே சாதனமாகக்கொண்டு) அவன் உயிரொழியச்செய்தாய்: என்பதும் ஆம்.

இதனல், தசரதனுக்கு அவன்மேற்கொண்டிருந்த சத்தியரூப தர்மமும் பகவதபசாரத்துக்கு உடலானபோதே அநர்த்தகரமாயிற்று என்பதாம்.

இன்னும், மானிடத்தன்மையொழிந்து, வாயால் மக்களை உயிருடன்தின்னும் விலங்கும் அரக்கியுமாயினை என்பதும் ஒரு தொனி.

தீரா வன்பழிகொண்டும் திருவெய்தி என்றும் நீரே வாழவுவந்தீர் என்றதன் கருத்து, அவனுடன் கூடியிருந்துவாழும் வாழ்க்கையை விரும்பாது,

"பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல்குரவே தலை"

என்னும் பொருள்நூல்நீதியை மறந்து, 'நில்லாதவற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மை'கொண்டு, அகண்ட சாம்ராஜ்ய மடைந்து,

> ''ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
> கோடியு மல்ல பல''

என்னும்படி அளவிறந்த சிந்தனையோடு தன்னலமொன்றேகருதி வாழவிரும்பினாய்; இது எத்தனை அறிவீனம்! என்பதாம்.

அவன் ஏகக்கன்றும் தாயும் போவனகண்டும் கழியீரே என்றதன் கருத்து, உடையோனான இராமபிரானொருவன்செல்ல, உடைமை யாயுள்ள சரப்பொருள்களெல்லாம் உடன்செல்வதைக்கண்டிருந் தும் ஒழிந்தாயில்லை: என்பதாம்.

இதனால், உடையோனையொழிந்து உடைமை வாழாதென் பது குறிப்பு.

'எல்லோரும் சென்றார்கள்' என்னும் பொருளில் கன்றுங் கன்றாய்ச்சியுமாய்ச் சேன்றார்கள் என்று வழங்குங் கிராமியவழக்கைக் கொண்டு, இழிவுசிறப்பும்மையாலும் இலக்கணக்குறிப்பாலும் உயர்திணைப்பொருளும் அடங்கக் கன்றுந் தாயும் போவனகண்டும் என்றார். கன்றும் தாயும் என்றது, இளையரும் முதியரும் இளைய தும் முதியதும் எல்லாம் என்றபடி. இப்பொருளில் ஆபாலகோபாலம் என்றும் குழந்தைகுட்டிகளுடன் என்றும், குஞ்சுகுழந்தைகளுடன் என்றும் வழங்குவதுண்டு. கன்று ரக்ஷ்யவர்க்கங்களையும், தாய் ரக்ஷகவர்க்கங்களையும் குறிப்பாற் காட்டுதலால், உலகினுள்ள ரக்ஷ்யரக்ஷகவர்க்கங்களெல்லாம் சர்வரக்ஷகனும் சர்வசேஷியுமான எம்பெருமானுக்கு உடைமை என்பதாயிற்று. மஹாகவிக்கு இது வே கருத்தென்பதை,

> ''ஏகிய குரிசில்பின் யாவர் ஏகிலார்
> மாவியல் தானையம் மன்னை நீங்கலாத்
> தேவியர் ஒழிந்தனர் தெய்வ மாநகர்
> ஓவியம் ஒழிந்தன உயிரிலாமையால்''

என்பதனால் அறியலாம்.

இதனால் சரமும் அசரமும் ஆன எல்லாப்பொருள்களும் எம்பெருமானுக்கு உடைமையாதலால், உடையோனாகிய அவனுக்கே உரியவாகி, அவனுக்கு அதிசயத்தைவிளைவிக்கக்கடவன என்பதும், அவற்றுள் உயிருடைப்பொருளான சரப்பொருள்களெல்லாம் அறிவுடைமையால் உடையோனான அவனுடன் சென்றன என்பதும், ஓவியம் முதலிய அசரப்பொருள் உயிரில்லாமையாலும் சரிக்குமாற்றல் இல்லாமையாலும் அவனுடன் செல்லாவாயின என்பதும் கவிகருத்தாகக் கொள்ளத்தகும்.

இக்கருத்தைப் பரதாழ்வான்பேச்சாலே வெளியிடக்கருதிய மஹாகவி, 'கன்றும் தாயும் போவனகண்டும் கழியீர்!, மாயாவன் பழிகொண்டும் திருவெய்தி என்றும் நீரே வாழவுவந்தீர்' என்றார். மாயாவன்பழி - ஸ்வாமித்துரோகம். திரு - ராஜ்யஸ்ரீ.

இப்பாசுரத்தால் நல்லோர்களெல்லோரும் தமக்குரிய உடைமைப்பொருளையெல்லாம் ஸர்வஸ்வாமியான எம்பெருமானுக்கே சமர்ப்பித்துத் தாமும் அவனுக்கு உடைமையாய்ச் சைதந்யகார்யமான அவனடித்தொழும்பே புரிந்து, அவனருள்பெற்றிருப்பர் என்பதும், இவ்வர்த்தம் வேதாதி சாஸ்த்ராப்பியாசத்தாலேயே தெரியவேண்டுமென்பதொன்றில்லை; ஆசார்யோபதேசத்தாலே தெரியவேண்டுமென்பதும் இல்லை; இராமபிரானுடைய ஸ்வாமித்வரூப குணாதிசயத்தாலே கன்றும் தாயுமான விலங்குகளும் அடங்க எல்லோராலும் கண்கூடாக (பிரத்யக்ஷமாக) ஸ்வாநுபவம்கொண்டு அறியக்கிடந்ததே! உன் துர்ப்புத்தியாலே அதனை அறியாதொழிந்து, தீயனபுரிந்தாயே! இது என்ன விபரீதம்? என்று கைகேயியைப் பரதாழ்வான் வெறுத்துக்கூறியவாறு காட்டியபடி.

இவ்வாறு கைகேயியிடத்தில் அவனுக்குள்ள வெறுப்புக் குறிப்புக்காட்டி இவ்வநர்த்தப்பாடெல்லாம் தன்னை உத்தேசித்து வந்தமையால்,

"கொன்றேன் நான் என்தந்தையை உன்றன் கொலைவாயால்
அன்றே கானத் தண்ணலை யுய்த்தேன்"

என்று இக்கொடுவினையைத் தன்மேல் ஏறிட்டுக்கொண்டு தன்னையும் வெறுத்தான்.

இதனல் ஒருவனை உத்தேசித்து அவனுக்கு நலம்கருதிப் பிறர்செய்யும் தீவினை அவ்வுத்தேசிக்கப்பட்டவனையும் பற்றிக் கொள்ளும் என்னும் நீதிநெறி காட்டியவாறு.

இக்கொடுவினை தன்னைஉத்தேசித்துச்செய்தமையால் தன்னைப்பற்றுமென்பதுகண்டு தானே தன்னில் வேருனவனுய் இக் கொடுவினைதீரும் பரிகாரமாகத் தன்னுயிர்நீங்காது நிற்பதேன்? என்னும் ஆசங்கை தன்னுள்ளேதோன்ற,

"உண்ணு நஞ்சங் கொல்கிலதென்னும் உரையுண்டென்
றெண்ணு நின்றேன் அன்றியிரேன் என்னுயிரோடே"

என்று சமாதானமடைந்தான். இதன் கருத்து: உலகத்தில் உயிர்களைக் கொல்லவல்ல நஞ்சுஇருந்தாலும், அது தன்னையுண்டவுயிர்களைக் கொல்லுவதல்லது உண்ணுதவுயிரைக் கொல்லாதவாறு போல, உலகத்திற் பிறர்செய்யும் தீவினையும் தனக்கு நலமென்று உட்கொண்டிருப்போனைப்பற்றித் தீமைவிளைப்பதல்லது, நலமென்று உட்கொள்ளாது தீதென்று கடிந்திருப்போனைப்பற்றித் தீமைவிளையாது என்னும் நீதிநெறியுட்கொண்டான்: என்பதாம்.

பின்பு, பரதாழ்வான், தான் கைகேயி வயிற்றிற்பிறந்த குடற்ருெடக்காலன்றே தன்னையுத்தேசித்து இத்தீவினை விளைந்ததென்றுநினைந்து, இத்தீவினைக்குக் காரணமான அக்குடற்ருெடக்கை அறுக்கவேண்டுமென்றுகருதி, அதற்குக்காரணமான தன் பழவினையைஒழித்தற்குரிய பிராயச்சித்தஞ்செய்யவிரும்பினுனுகி,

"என்றுன் பாவிக் கும்பி வயிற்றி னிடைவைகித்
தோன்றும் தீராப் பாதக மற்றென் துயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றும் காணச் செய்தவம் யானே முயல்கின்றேன்"

என்று பிராயச்சித்தசங்கற்பம்பண்ணிக்கொண்டான். இவன் சங்கற்பித்தவுடனே இவன்நெஞ்சில் தவவொழுக்கம் குடிகொண்டுவிட்டது. அத்தவவொழுக்கத்துளெல்லாம் தலையாயுள்ள அருளும் பிறந்தது. அதனலே,

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்"

என்பதுபற்றி, தான்மேற்கொண்டொழுகக்கருதிய தவவொழுக்கத்துக்கு இசைய, தனக்குக் கேடுவிளைத்த கொடுவினையாட்டியான கைகேயியிடத்திலும் கருணையுடையவனாய், அவளைத் தீவாய்நரகம் புகாமற் காக்கக்கருதி, அவளுக்கு பகவதபசாரப்பிராயச்சித்தம் சொல்லியபடியைச் சொல்லக்கருதிய மஹாகவி,

"சிறந்தார் சொல்லும் நல்லுரை சொன்னேன் செயலெல்லாம்
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தா யாகிற் றூயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லைப் பிறிதென்றான்"

என்கிறார். இதனுள்,

சிறந்தார் சொல்லும் நல்லுரை சொன்னேன் என்றதன் கருத்து, மஹாபாதகங்களைச்செய்தார்க்கு அப்பாதகங்கள்தீர்ந்து அவர் தூயராகுமாறு பிராயச்சித்தம் விதிக்கும் தர்மஜ்ஞர்களான சபையார்சொல்லும் பகவதபசாரப் பிராயச்சித்தார்த்தகமான ஹித வசனங்களைத் தவவொழுக்கம்பூண்ட நான் உனக்கு இதோசொல்லுகிறேன்; கேள் என்பதாம். இது கருணைக்குறிப்பு. 'சொன்னேன்' என்று விரைவுபற்றிக் காலம் மயங்கிற்று.

இவன் சொல்லப்போகும் பிராயச்சித்தத்தை அவள் உவந்து ஏற்றுக்கொள்ளவேண்டி, அது செய்வதனால் உண்டாகும் நலன் சொல்லுகிறான், செயலெல்லாம் மறந்தாய் செய்தாயாகுதி என்று. இதன்கருத்து, நான் சொல்லும் பிராயச்சித்தம் செய்வாயானால் நீ செய்த செயலான தீவினைகளையெல்லாம் அறியாமற்செய்தாயாய் விடுவாய்: என்பதாம். அதாவது—புத்திபூர்வமாகச்செய்தாய் என்று பழிக்கப்படமாட்டாய்: என்றபடி.

இனி, இப்பிராயச்சித்தஞ்செய்யாதவழிப்படும் இழுக்குச் சொல்லக்கருதி, இரட்டுறமொழிதலால், செயலெல்லாம் மறந்தாய் செய்தாயாகுதி என்கிறுன். இதன்கருத்து, நான் உனக்குச் சொல்லப் போகும் பிராயச்சித்தத்தை நீ செய்யாமற்போவாயாகில், விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாகிய நல்லறவினைகளான செயல்க ளெல்லாவற்றையும் மறந்துவிட்டாய் என்றும், அவற்றின் மறுதலை யான தீவினைகளையெல்லாம் அறிந்தே செய்துவிட்டாயென்றும் உலகத்தாரால் நீ பழிக்கப்பட்டுவிடுவாய்: என்பதாம்.

எல்லா நல்வினைகளும் பகவத்பரிசரியையில் அடங்குதலால், அத்தகைய பகவத்பரிசரியாரூபமான ராமராஜ்யாபிஷேகத்தைச் செய்ய நினையாதொழிந்ததனை நினைந்து, செயலெல்லாம் மறந்தா யாகுதி என்றும், செயலாகிய நல்லறவினைகளுக்கெல்லாம் மறுதலை யான தீவினைகளெல்லாம் பகவத்பரிசர்யா ரூபமான பரமதர்மத்தின் மறுதலையாயுள்ள பகவதபசாரத்துள் அடங்குதலால் பகவதபசார ரூபமான ராமவனவாசநியமனம் ஒன்றுசெய்ததைநினைந்து, எல்லாத் தீவினைகளும் செய்தாயாகுதி என்றும் கூறினுன்: என்க.

இக்கருத்தை மஹாகவி, இராமபிரான்வாயாலும்,

"எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே"

என்று பின்வெளியிட்டமையாலறியலாம்; இதனுல் மறைகளிலியம் பற்பாலனவாய அறங்களெல்லாம் பரதன்செய்கையாகிய கடவுள் வழிபாட்டுள் அடங்கும் என்பதாயிற்று.

இனி, சொல்லத்தகும் பிராயச்சித்தம் செய்தே தீரவேண்டும் என்பதனைக் குறிப்பாற் காட்டிக்கொண்டு, கைகேயிக்கு அப் பழிவாராது தீர்தற்குரிய பிராயச்சித்தம் சொல்லுகிறுன், மாயாவுயிர் தன்னைத் துறந்தாயாகில் தூயையுமாதி என்று. இதன்கருத்து, பகவ தபசாரம்செய்தவுயிர்க்குப் பிராயச்சித்தமாக அவ்வுயிர் தானே மாயவேண்டும். உயிர் அங்ஙனம் மாயவொண்ணுத நித்தியப் பொருளாயிருக்கையாலே அது செய்யல் இயலாதாயினும், அதற் குப் பரியாயமாக அவ்வுயிர் உன்னுடலைவிட்டொழியுமாறு நீ

துறந்துவிடுவாயானல், 'நல்வினையெல்லாம் மறந்தாய்' என்றும், 'தீவினையெல்லாம் செய்தாய்' என்றும் உலகத்தார் உன்னைப் பழிக்கும் பழியும் ஒழிந்து பரிசுத்தியும் உடையையாய்விடுவாய்: என்ருன், என்பதும், நீ உயிர்மாய்த்தல் அருஞ்செயலென்று அஞ்சவேண்டா; அது மாயாது நித்தியமாயுள்ளது; அதனைத் துறந்துவிடுதல் எளிதிற்செய்யத்தக்கது: என்ருன், என்பதும் ஆம். இது, பிராயச்சித்தமும் அதற்குப் பயனும் சொல்லியபடி.

இனி, அவள் இதனை உவந்தேற்றுக்கொள்ளவேண்டி, ஹிதவசனம் சொல்லுகிருன், உலகத்தே பிறந்தாயாதி என்று. இதன் கருத்து, உயிர்துறத்தலாலே இவ்வுலகத்தைவிட்டு ஒழிந்து போவேனே என்று கவலாதே; இப்பிராயச்சித்தத்தாலே உனக்கு வந்த பழி ஒழியும்; அது ஒழியவே உனக்குள்ள புகழெல்லாம் தோன்றும்; அப் புகழுடம்பால் இவ்வுலகத்தில் பிறந்தவளாகவே இறவாது நெடுநாள் இன்புற்றிருப்பாய்; ஆதலால் இதனை எளிதிற் செய்: என்பதாம்.

இனி, இதனினும் எளிதாகவும் பரியாயமாகவும் செய்யத்தக்கதொரு பிராயச்சித்தம் இல்லையா? என்று நீ சங்கிக்கவேண்டா என்பது தோன்ற, ஈதலது இல்லைப் பிறிதென்ருன் என்கிருர்.

இதனல் பகவதபசாரப் பிராயச்சித்தம் பரதாபிப்பிராயத்தாலே உயிர்விடுதலென்று சொல்லப்பட்டது.

இவ்வாறு கைகேயிக்குப் பகவதபசாரப்பிராயச்சித்தம் சொல்லிய பரதாழ்வானது செயலுரைக்கக் கருதிய மஹாகவி,

"இன்னணம் இனையன இயம்பி யானும் இப்
பன்னருங் கொடுமனப் பாவி பாடிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவனென் றெழுந்து போயினன்"

என்கிருர்.

இதனுள், இன்னணம் என்றது, இங்கு என்னும் பொருள்பட நின்று, பரதாழ்வான் கைகேயியை வெறுத்துப்பேசும் பேச்சு இவ்வளவோடொழிந்ததில்லை; இன்னும், கௌசலையிடத்திலும்

குகப்பெருமாளிடத்திலும் இவன் பேசும்போது தோன்றுவதாயிருக்கும்: என்று கவியின்கருத்தைக் குறிப்பாற் காட்டுகிறது.

இனையன இயம்பி என்றதன்கருத்து, இங்கு நான் என்னறிவு கொண்டு சொல்லியபடி இது; அவனறிவுகொண்டு சொல்லியபடி என்னுல் இயம்பல் இயலாது. அது, இதனை நூற்றுனுறழ்ந்து அடுக்கடுக்காய் அடுக்கிட உயர்ந்தபடியாயிருக்கும்: என்பதாம்.

பன்னருங் கோடுமனப் பாவிபாடிரேன் என்றதன் கருத்து, கைகேயி, ராஜ்யாபஹாரம்செய்து பொருட்கேடுவிளைவித்தலால், பாவி என்றும், ராமனுக்கு ராஜ்யாபிஷேகத்தைத்தவிர்த்த பகவத்கைங்கர்யவிரோதியாதலால், கோடுமனப்பாவி என்றும், அவனை வனம்புகுவித்தலால் பன்னருங் கோடுமனப் பாவி என்றும் கொண்டு, அவளை அப்பாவங்கள் தீர்ந்து தூயளாமாறு பிராயச்சித்தஞ்செய்யச்சொல்லியும், அவள் அதுசெய்து தீர்த்துக்கொள்ளாமையாலே புத்திபூர்வமாக இக்கொடியபாவங்களைச் செய்தவளாகவே உலகத்தாராலும் பழிக்கப்படுவாள்; அப்பழிகாரியிடம் இரேன் என்றுன்: என்பதாம்.

இதனுல், பகவத்வேஷிகளாயுள்ளவர்கள் தனக்கு அநுகூலபுத்தியுடையவர்களாயிருந்தாலும் அவர்களோடு சகவாஸம்செய்யலாகாதென்பது குறிப்பாயிற்று.

துன்னருந் துயர்கேடத் தூய கோசலை பொன்னடிதொழுவன் என்று எழுந்துபோயினுன் என்றதன்கருத்து, இவன் முன்பு தனக்குத் தசரதன்சாக்காட்டால் உண்டான துயர்தீரவேண்டி, ஔபாதிக சரீரபந்துவான தாயைவிட்டு, ஆத்மபந்துவான இராமபிரானை தனக்கு "எந்தையும் யாயும் எம்பிரானும்' ஆவனென்று எண்ணி, அவனைத் தாள்தொழுவான் விரைந்தான். இப்போது அவன் இங்கில்லையென்று கைகேயியால் அறிந்தமையால், அத்துயரினும் பெரிய துயர் உண்டாயிற்று; (அதாவது:—தசரதன் இறந்ததனுல் துயரும், கைகேயி சூழ்வினையால் அருந்துயரும் இராமவனவாசத்தால் துன்னருந் துயரும் ஒன்றன்மேல் ஒன்றுக உண்டாயிற்று என்பது.) அத்துயர்கள் தீரவேண்டி இராமபிரானை தாய்க்கும் தாயாயும், "என்னநோன்பு நோற்றுள்கொலோ இவனைப்

பெற்றவயிறுடையாள்" என்னும்படி, இராமபிரானைப் பிள்ளையாகப்பெறுதற்கேற்ற தவம்புரிந்த தூய்மையுடையளாயும், "தங்கணுயகரிற் றெய்வம் தவம்பிறிதில வென்றெண்ணும் மங்கைமார் சிந்தைபோலத் தூயது" என்று தூய்மையுடைய பொருளுக்கு உவமம் சொல்லத்தக்க உள்ளத்தூய்மையுடையளாயும் உள்ள கோசலாதேவியென்னும் தூய தாயின் பாதசேவைசெய்து, என் தீய தாயால் வந்த துயர்தீர்வேன் என்று எழுந்துசென்றான்: என்பதாம்.

இதனால், பகவத்ஸேவை கிடையாதவிடத்து, அதனை பாகவத ஸேவையால் அடையவேண்டுமென்பதாயிற்று.

இனி, கைகேயியைத் துறந்து, 'துன்னருந் துயர்கெடத் தூய கோசலை பொன்னடி தொழுவன் என்று எழுந்து' போன பரதாழ்வான், கோசலாதேவியை அடைந்து, 'காண்டகு தடக்கையால் (அவள்) கமலச்சீறடி பூண்டு' கிடந்து புலம்பி, இழவுவினவி அழுத அழுகையை வியக்கக் கருதிய மஹாகவி,

"எந்தை யெவ்வுலகுளான் எம்முன் யாண்டையான்
வந்தது தமியன்இம் மறுக்கங் காணவோ
சிந்தையின் உறுதுயர் தீர்த்திரால் என்றன்
அந்தரத் தமரரும் அழுது சோரவே"

என்கிறார். இதனுள்,

எந்தை எவ்வுலகுளான்? என்றதன்கருத்து, அம்மா! உம்முடைய பர்த்தாவான எங்கள் தமப்பனர் இவ்வுலகவாழ்வை வெறுத்து இதனின் வேறாய் உயர்ந்த பரலோகம் சென்றாரே! (எந்த லோகம் சென்றார்?) அவர் சென்ற லோகம் இன்னதென்று அறியேனே! அவர் செய்துள்ள நல்லறங்களாலே சுவர்க்கலோகம் சென்றாரோ? சுவர்க்கலோகமான தேவருலகுக்கு அவர் உடலொழியச் செல்லவும்வேண்டுமோ? சம்பராசுரயுத்தத்தில் உடலுடன் சென்று சம்பரனைக்கொன்று இந்திராதிதேவர்களை வாழ்வித்து இவ்வுலகிற்கு மீண்டுவந்தாரே? அந்தவுலகத்தை அவர் விரும்புவரோ? வேறு எந்தலோகம் சென்றாரோ? 'தங்கள் நாயகரிற் றெய்வம் தவம்பிறிதிலவென்றெண்ணும் மங்கைமா'ரிற் சிறந்த உம்மை மனைபறக்கிழத்தி (தர்மபத்நி) யாகக்கொண்ட பெரும்

புண்ணியப்பேற்றாலே பிரும்மபதமான சத்தியலோகத்தையடைந்தாரோ? அன்றி, இராமபிரானைப் புத்திரனாகப்பெற்ற நற்பாக்கியத்தாலே 'மீட்சியில்லா வைகுந்தமாநக'ரையுடைய பரமபதமென்னும் பரலோகத்தை அடைந்தாரோ? அறியேனே; அவ்வுலகங்களுக்குத்தான் இவர் ஏன் போகவேண்டும்? எம்பெருமான் அவதரித்த பெருமையாலே,

"எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவா னுதரிக்கின்ற
அவ்வுலகத்தோர் இழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமாநகரம்"

என்று சொல்லும்படியுள்ள இதனை நீத்தவர், அவ்வுலகங்களை விரும்பிச்செல்வாரோ? செல்லவே செல்லார். பின்னை எவ்வுலகம் செல்வார்? அறத்தை அழித்துப் பொருளும் போகமுமே புருஷார்த்தமென்று கொண்டு புருஷனைக் கொன்ற புலைமகளான கைகேயியைப் போகமகளாகக் கொண்டதனாலுண்டான கொடுந்துயருக்காற்றாது, அது தீரவேண்டி, இத்துணை துயருக்கு இடமின்றியிருப்பது எமலோகமென்று எண்ணி, காட்டுத்தீக்கு அஞ்சிக் கடலிடைவிழுவாரைப்போலே சிறிது ஆறுதலடைய விரும்பி அங்குச் சென்றாரோ? சொல்லம்மா என்று அழுகிறான்: என்பதாம்.

இதனால் இவனுக்குக் கோசலாதேவியிடத்தில் மிக்க உவப்பும், தசரதனிடத்தில் ஒருபக்கம் உவப்பும் ஒருபக்கம் வெறுப்பும், கைகேயியிடத்தில் மிக்க வெறுப்பும் உள்ளமை குறிப்பாற் காட்டியவாறாயிற்று.

இவ்வாறு கௌசலையின் இழவுவினவிப் பின்பு தான் இராமனை அடையாத துயரம்சொல்லி அழுவான், எம்முன் யாண்டையான் என்றான்: என்கிறார். இதன் கருத்து, எங்களண்ணன் இராமன் இந்நகரைவிட்டு எங்கேபோயிருப்பான்? 'இராமனுள்ள இடம் அயோத்தி' என்பார்களே? இது அயோத்தியில்லையா? அயோத்தியானால் அவன் இங்கு எங்கேயிருக்கிறான்? அறியேனே! என்று அழுகிறான்: என்பதும், அவன் எங்கேபோனாலும் உம்மிடம்சொல்லி விடைகொண்டுசெல்வானே? அவன் எவ்விடம் போயிருப்பதாகச் சொல்லிப்போனான்? என்பதும் ஆம்.

இதனால் இவன் அவனைத்தேடிச்சென்று அழைத்துவரக் கருதும் குறிப்புக் காட்டியபடி.

இனி இவன் கருதிவந்த பகவத்பரிசரியையான ராமராஜ்யாபிஷேக ஸேவையிழந்ததுயரம் சொல்லியழுவான், வந்தது தமியன் இம் மறுக்கம் காணவோ? என்றான் என்கிறார். இதன்கருத்து, இராமனுக்கு ராஜ்யாபிஷேகம்செய்வித்து, அவனை முடிமன்னர் பலரும் மனமகிழ்ந்து அடிதொழுதிருக்கும்போதத்தாணித் திருவோலக்கத்திலே அடியேனும் அவனைத்தொழுதுகொண்டிருக்கவன்றோ அவாவோடு வந்தேன்; அதனையொழிந்து, அவன் பிரிவாற்றாது அழுதுகொண்டிருப்பாரோடு நானும் மனமறுகி அழுதுகொண்டிருப்பேனாவேனோ? என்று அழுகிறான்: என்பதாம்.

இது அவனை அழைத்துவந்து ராஜ்யாபிஷேகம்செய்யக் கருதிய குறிப்புக்காட்டியபடி.

இனி, இவன் இஷ்டஸித்திக்குக் கோசலாதேவியை உபாயமாகப்பற்றுவானாகி, சிந்தையின் உறுதுயர் தீர்த்திரால் என்றான் என்கிறார். இதன்கருத்து, உம்மிடம் இராமன் சொல்லிச்சென்ற இடத்தைச்சொல்லி, நீரும் இங்குள்ள அடியோங்களும் அடைந்துள்ள தீராத்துயரைத் தீர்த்தருளவேண்டும்: என்று 'காண்டகு தடக்கையால் (அவள்) கமலச்சீறடி பூண்டு'கிடந்து பொடித்தலந்தோளுறப் புரண்டுபுரண்டழுதான்: என்பதாம்.

இதுவும் அவனையழைத்துவந்து ராஜ்யாபிஷேகம் செய்துவைக்கக்கருதிய குறிப்புக்காட்டியபடி.

இனி, பரதாழ்வான் அடைந்திருக்கும் சோகத்தின் (அழுகையின்) மிகுதியைக்காட்டுவார், அந்தரத்தமரரும் அழுதுசோரவே (அழுதான்) என்கிறார்.

ஒருவர் தாம் பெறுதற்கரியதொன்றை யிழந்தால் அவ்இழவு காரணமாகத் தமக்குள்ளேதோன்றும் துயரமும், அதன் மெய்ப்பாடான தோற்றங்களும் அழுகையென்னும் உடல்கொளுயிர்க்குணமாம். அது தன்கேடு கண்டு அழும் அழுகையும் பிறர்கேடு கண்டு அழும் அழுகையும் என இருவகைப்படும். அவற்றுள்

தன்கேடுகண்டு அழும் அழுகை தன்னலம்வேண்டியதாதலால் இழிகுணமாம். இது, உயர்ந்தோர்க்குரியதன்று. பிறர்கேடுகண்டு அழும் அழுகை பராநுகூலபுத்தியால் அன்பு கருணை என்னும் அறநெறியடியாகத்தோன்றுதலால் உயர்குணமாய் உயர்ந்தோரால் கொள்ளப்படும். இவ்வுயர்குணத்தை, முன்பு,

"கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பாவை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்"

என்று தொடங்கிய பாடல்களால் புலப்படுத்தார். இங்கு அவ் வழுகையினும் சிறந்ததாயிற்றுப் பரதாழ்வானழுகை யென்பார், அந்தரத் தமரரும் அழுது சோரவே (அழுதான்) என்கிறார். இதன் கருத்து, இங்குக் கௌசலையுள்ளிட்டாரெல்லார்க்கும் இராமனைப் பிரிந்த துயராலழும் அழுகையினும் பரதாழ்வானழுகையைக் கண்டழும் அழுகை பெரிதாயிற்று; இவர் இவ்வாறு அழும் அழுகையைக் காணவே, அழுகையென்பதொன்றுண்டு என்று அறியாராய் அமுதபானத்தாலே களிப்புற்றிருந்த சுவர்க்கவாசிகளான தேவர்களும் அழுதார்கள். அவ்வளவினன்றி, அந்தரம் என்னும் தெளிவிசும்பிலுள்ளவரான அமரர் என்னும் நித்யசூரிகளும் அழுதுசோருமாறு அழுதான்: என்பது. இவ்வழுகை பரதுக்கதுக்கித்வம் என்னும் உயர்குணமாதலால் தேவர்க்கும் உரியதாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

உ

# நிலவும் பொழிலும்

[பிரபுத்தபாரத ஆசிரியர் ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்]

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலுக்கு முடிவுரை கூறுகின்றார். உயிர்ப்பொருள் உயிரில்பொருள்களிற் காணப்படும் சத்துவவேறுபாடுகளைக் கண்ணுள்வினைஞரும் மண்ணீட்டாளரும் நுண்ணிதினோக்கி வண்ணத்தினாலும் வடிவினாலும் வெளிப்படுத்திக்காட்டுவார். இசைவல்லோர் செவி கருவியாக ஆராய்ந்து, சத்துவவிகற்பங்களை இசையுருவாகத் தருவார். கவிஞனோவெனிற் கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணர்ந்து இம்மூவர் செயலினையும் செவ்விதிற் புரிந்து தான் பெற்ற இன்பத்தினை வையகம்பெறுமாறு செய்வான்.

நிலவும் பொழிலும் தரும் இன்பத்தினை நுகர்ந்த புலவன் எவ்வெக்கருவிகளினாலே தான் நுகர்ந்த இன்பத்தை யாமும் நுகருமாறுசெய்கின்றான் என்பதை ஆராய்ந்துணர்வதே இப்பொருளுரையின் நோக்கமாகும்.

இன்பப்பொருளனைத்தும் அழகினோடு இயைந்துநிற்பன. அழகினை அளத்தற்கு மனிதர் கொள்ளும் அளவுகோல் இரண்டு உள.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்றமையின், மகளிர்பாற்பெறும் இன்பவிழைவின்வயப்பட்டோருக்குப் 'பனிமலர்க்குழற் பாவைநல்லா'ரே எல்லா அழகிற்கும் அவ்வழகின்வழியெய்தும் எல்லா இன்பங்களுக்கும் நனிசிறந்த எடுத்துக்காட்டாவரென்பது வெளிப்படை.

காமவிழைவினீங்கி அருணெறிநின்று வீடுபெறமுயல்வாருக்கு அவ்வீடுபேற்றினை நல்கும் தனிப்பெருந்தலைவன்றானே இனியவற்றுளெல்லாம் இனியனாவான். அழகுடைப்பொருளனைத்தினிலும், தலைவனது ஒளிவிளக்கத்தைக் கண்டு பரவசப்படுவது அன்பராயினாருக்கு இயல்பாகும்.

கவிஞன் கண்ணாடிபோன்று பிறர்நிகழ்ச்சியைத் தன்னிகழ்ச்சியாகக்காட்டும் ஆற்றல்வாய்ந்தவனாதலின், மேற்கூறிய அளவுகோல் இரண்டினாலும் அழகினை அளத்தல் அவற்கு இயல்பாகும்.

'பவளம் அழகிது, அன்புக்குரியாளது செவ்விதழினையொத்தலின்; முத்து அழகிது, அவளது பல்வரிசையையொத்தலின்; பொன் அழகிது, அவளது மார்பிற் படர்ந்த திதலைபோறலின்; தாமரை அழகிது, அவள் கையிலேந்திய இளங்குழவிக்கு ஒப்புடையதாதலின்; மேகம் அழகிது, அவளது கூந்தலை நிகர்த்தலின்; நீலம் அழகிது, அவளது கண்களுக்கு உவமைகூறுதற்கு இயைந்ததாதலின்; பிறை அழகிது, அவளது ஒண்ணுதலுக்கு ஒப்பாதலின்;' எனக் காமுகன் உவமான உவமேய ஒப்புமைகண்டு உளமகிழ்வுறுவான்.

"பவளமால்வரையில் நிலவெறிப்பதுபோற் பரந்த நீற்றழகு பச்சுடம்பில் திவள மாதுடனின்றாடிய பரமன்" எனப் பாடிய புலவனது கண்களுக்குப் பவளம் சிவபிரானது திருமேனியின்வண்ணமாகக் காணப்படுகிறது. "பொன்வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி" எனப் பாடிய கவிஞர் அத்திருமேனியைச் செம்பொன்னின்வண்ணமாகக் காண்கின்றார். "கருமுகில் தாமரைக் காடுபூத்து" எனப் பாடிய பாவாணர் கருமுகிலினையும் தாமரையையும் காவற்கடவுளது திருமேனியாகவும் அவயவங்களாகவும் தரிசிக்கின்றார். "கறைமிடறணியலுமணிந்தன்று" என்றோர், செம்மேனிக்கு அழகுசெய்யும் நீலக்கறையினை இறைவனுருவிற் பார்க்கின்றார். "பிறைநுதல்வண்ணமாகின்று, அப்பிறை பதினெண் கணனுமேத்தவும்படுமே" என்புழிப் பிறையினுயர்வுக்குக் காரணம் இறைவன்திருமுடிமேலிருத்தலென்பது குறிக்கப்பட்டது,

'இனியாரோடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போலும்' என நக்கீரனார் கூறினாராதலின், அன்பிற்கினியாளோடு தலைப்பெய்த பொழிலும் அவள்போன்று இன்பந் தரும் நீர்மையதாயிற்று. 'ஏர்மன்னு கோதையைப்போ லினிதாயிற்றிவ் வீர்ம்பொழிலே' எனக் காதலனொருவன் கூறுகின்றான்.

இறைவனிடத்து அன்புசெலுத்தும் பெருந்தகையோனுக்கு இறைவனது திருக்கோயிலும் அவனது மெய்யடியாரது திருவுருவமும் அவனாகத் தோன்றி இன்பமளிப்பன.

> "மாலற நேய மலிந்தவர் வேடமும்
> ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்னும் பெரியார்வாக்கினை நோக்குக.

உளத்தின் நீர்மைக்கேற்பப் புறத்தேதோன்றும்பொருள் உரு வேறுபட்டுத் தோன்றுமாதலின், புணர்ந்தார்க்கு இன்பமளித்து ஒண்ணுதலும் பிறவுமாகத் தோன்றிய பிறை, தணந்தார்க்கு அச்சச் சுவையொடுகூடிய கொடியவுருவாகத் தோன்றுதலுங்கூடும்.

> "ஒன்றே யெயிற்ற தொருபெரும்பே யுலகம் விழுங்க வங்காந்து
> நின்றாற் போல நிழலுமிழ்ந்து நெடுவெண் டிங்க ளெயிறிலங்க
> இன்றே குருதி வானவா யங்காந் தென்னை விழுங்குவான்
> அன்றே வந்த திம்மாலை அளியே னாவி யாதாங்கொல்"

எனப் புலம்பிய கனகமாலைபார்கண்ணுக்கு அந்திமாலையானது ஓரெயிற்றினையுடைய கரிய பெரிய பேயாகத் தோன்றிற்று. அவ்வெயிறு பிறைத்திங்கள்.

> "மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பிற்
> றொக்க பேரிருள் மாதரொத் தனவுடுத் தோற்றஞ்
> செக்க ரீசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
> கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே"

எனக்கூறிய அன்பர்கண்ணுக்குப் பிறையானது இறைவன்கைக் கபாலமாகக் காணப்பட்டது.

'பிறைக்கோட்டியானை,' 'பிறைவில்' என்றவின் வீரர்கண்ணுக்குப் பிறையானது யானைக்கோடாகவும் வில்லாகவும் தோன்றிற்று.

உலகளித்தலால் நிறைமதியமானது சோழனது கொற்றக் குடைபோன்றதென இளங்கோவடிகள் இயம்பினர்.

"ஒன்றிய திங்களைக் காட்டி ஒளிமணி வண்ணனே யென்னும்
நின்றகுன் றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும்
நன்றுபெய் யும்மழை காணின் நாரணன் வந்தானென் றாலும்
என்றின மையல்கள் செய்தார் என்னுடைக் கோமளத் தையே"

என அந்தீந் தமிழ்ச்செய்யுள் யாத்த ஆழ்வார்கண்களுக்குத் திங்களும் குன்றமும் மழையும் ஸ்ரீமந் நாராயணனது திருவுருவாகத் தோன்றிநின்றன.

"காழகச் சேற்றுட் டம்பால் கதிர்மணிக் குடத்தி னேந்தி
வீழ்தாச் சொரிவ தேபோல் விளங்கொளித் திங்கட் புத்தேள்
சூழிருட் டொழுதி மூழ்கத் தீங்கதிர் சொரிந்து நல்லார்
மாழைகொண் முகத்திற் றோன்றி வளைகடல் முளைத்த தன்றே"

என்றமையின், காப்பியக்கவிஞர்கண்ணுக்கு விளங்கொளித்திங்கட் புத்தேள் மகளிரது பசத்தல்கொண்டமுகமாகத் தோன்றிற்று.

மேற்போந்த அனைத்தும் வண்ணமும் வடிவும்பற்றி யெழுந்த வுவமங்கள். வினையும் பயனும்பற்றிய உவமங்களினாலும் அறிவுடையோர் திங்களின் அழகினை அளந்துகண்டார். இப்பரிசினை,—

"திங்க ளன்ன கல்வியும் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும்" எனவும்,

"தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து"

எனவும் கூறியவற்றுட் காண்க.

அழகுடைப் பொருளனைத்தினிலும் தனிப்பெருந்தலைவனைக் காணும் நீர்மையை ஆழ்வார்செய்யுளுட்போலவே மேல்வரும் கடுவன் இளவெயினனார்செய்யுளுள்ளும் காணலாம். அது,

"நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலும் திங்களுள

நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின், நாற்றமும் வண்ணமும் பூவையுள
நின், தோற்றமும் அகலமும் நீரினுள
நின், உருவமும் ஒலியும் ஆகாயத்துள
நின், வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள
அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏம மார்ந்தநிற் பிரிந்தும்
ஏவல் சான்றன வெல்லாம்
சேவலோங் குயர்கொடி யோயே"

என வரும். திருமங்கைமன்னனளித்த,

"மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்ப்
பின்னுருவாய் முன்னுருவிற் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணா தெண்ணும்
பொன்னுருவாய் மணியுருவிற் பூத மைந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவிற் றிகழுஞ் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே"

என்னும் திருநெடுந்தாண்டகச்செய்யுளையும் நோக்குக.

இனி ஒளியும் இருளும், வெண்மையும் கருமையும், பொன்மையும் பசுமையும், வெம்மையும் தண்மையும்: என முரணுறத் தோன்றும் பண்புகள் சிவசத்திபேதம்போன்று அழகுடைப் பொருள்வயின் ஒன்றிநின்று அதனது அழகுக்குக் காரணமாவன.

சிவபிரானது செம்பவளமேனியின்பாங்கர் உமாதேவியாரது மரகதமணிபோன்ற திருவுருத் தோன்றி அழகினைத் தருகின்றது. "பச்சைமாமலைபோல் மேனிபடைத்த இராமபிரான்பக்கத்திலே 'பொன்னின்சோதி' விளங்கும் திருமேனியோடுகூடிய சீதாபிராட்டியார் தோன்ற அழகு பொலிவினையடைகின்றது. இப்பரிசே நீலமணிபோன்ற விசும்பிலே நித்திலம்போன்ற வெண்டிங்கள் தோன்ற அழகுவிளங்குகின்றது.

"காழகச்சேற்றுட் டீம்பால்" எனக் காட்டிய சிந்தாமணிச் செய்யுளினுள்ளே நிறைமதியம் பளிக்குக்குடத்தினுக்கும், நிலவு அக்குடத்தினின்று சொரியப்பட்ட பாலுக்கும், இருள் கருஞ் சேற்றுக்கும் ஒப்பாகக் கூறப்பட்டன.

"வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோற்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச் சொரிய"

எனவரும் மணிமேகலையடிகளினுள்ளே நிலவும் பொழிலும் கூறப் பட்டன. 'தண்மதியம் என்றும் நிறைமதியாயிருக்குமாயின் ஞாயிற் றினுங் குறைந்த ஒளியுடையதென இழித்தொதுக்கப்படும்; பிறை யாய்த்தோன்றி வளர்தலின் புதுமையின்பாலதாகிய மருட்கைச் சுவையை நல்கி அழகுடைப்பொருளாயிற்று' என ஐயமும் அழகும் என்னும் உரையினுட் கூறினும். பரிசனங்கள் புடைசூழ்ந்த மன்ன னைப்போன்றும், தோழியர்கூட்டத்தினடுவண் வைகும் தலைமகள் போன்றும், பதினாயிரம் வித்தியார்த்திகள்நடுவண்வைகும் குலபதி போன்றும், எண்ணற்ற வெள்ளாம்பல்மலர்கள் பரவிய நீனிற மணி நீர்ப்பொய்கைநடுவண் அரிதினலர்ந்த வெண்பதுமம்போன்றும், விண்மீன்களிடையே விளங்குவது, தண்மதியத்திற்குப் பேரழகி னைத் தருவதாகும். முயற்கறையும் மதியத்திற்கு அழகினைத் தருவது; மழலைக்குழவிமுதல் முதியோரீறாக அனைவரும் மதியத் தினை உற்றுநோக்குதற்குக் கறையே காரணமாகும்.

நிலவும் பொழிலும் ஒளியும் இருளுமாக இயைந்துநின்று அழகுபயப்பன.

"இருள்பரந் தன்ன மாநிழன் மருங்கின்
நிலவுகுவிந் தன்ன வெண்மண லொருசிறை"

என்பதனையும் நோக்குக.

"வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்"

என மணிமேகலையும் பெரும்பாணாற்றுப்படையும் மரமடர்ந்த சோலையின் இருளினைத் தெளிவுபடுத்துகின்றன.

மரமும் செடியும் கொடியும் யாங்கணும் விரவி அடர்ந்து வளர்ந்துநிற்பதுவே சோலைக்கும் பொழிலுக்கும் அழகாகும்.

அங்ஙனமாதலின், அவை தம்மை உருவப்படுத்தி நமது அகக்கண் முன்காட்டுவதற்குக் கவிஞர்,

"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடவமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்"

என மரப்பெயர் பலவற்றை நிரைபெற அடுக்குவாராயினர்.

கபிலரும் பெருங்குறிஞ்சியுள்ளே 'ஒண்செங்காந்தள்' எனத் தொடங்கி நூற்றெட்டுப் பூப்பெயர்கூறியதும் பொழிலின்பொலிவினைச் சொல்லினல் அமைத்துக்காட்டுதற்கேயாம்.

'சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்தும், நாகமும் திலகமும் நறவமும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத் தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழில்' என்னும் களவியலுரையினுள்ளே நக்கீரனர் பெயரினெடு தொழிலினையும் விளக்கி அழகிய சொற்களை மோனையெதுகைத் தொடையியையவைத்துப் பூம்பொழில் ஒன்றினை ஆக்கித்தருகின்றார்.

திருத்தக்கதேவர் பொழிலானது மணமகளிரொப்பப் பொலிந்து தோன்றியதெனக் கூறி, அப்பொலிவினை விளக்குதற்கு மலர் மரங்களின் வண்ணத்தினையும் வடிவினையும் கண்ணுள்வினைஞர்போலச் சித்திரிக்கின்றார். அவர்செய்யுட்கள் வருமாறு:—

"பாசிப் பாசத்துப் பைம்பொனிரைத் தாலிபூத்த வேங்கை
மாசில் வெண்டுகிலே நீர்தோய்த்து மேற்போர்த்த வண்ணமேபோற்
காசில் மட்டொழுகப் பூத்தவழிஞ்சில் கண்ணார்கவின் கொண்டன
பேசிற் செந்தலைய வெண்கறைய புன்கம் பொரியணிந்தவே"

"கோடுதையாக் குழிசியோ டாரங் கொளக்குயிற்றிய
ஓடுதேர்க் கான்மலர்ந்தன்ன வகுள முயர்சண்பகம்
கூடுகோழிக் கொழுமுள் ளரும்பினவண் கோசிகம்
ஆடை பூத்தனபாதிரி வெண்கடம்புபசுந் தணிந்தவே"

"வெருகு வேட்பச் சிரிப்பனபோன் முகைத்த முல்லை வெய்யவாள்
அரவு பைத்தா வித்தன்ன அங்காந்த ளவிழ்ந்தலர்ந்தன
குரவங் கொண்ட குறும்பூழ்போற் கொழுங்கான் முகைசுமந்தன
குருதிக் கூரெயிறு கூத்தியர்கட் கொண்ட கொடித்தளவமே"

தில்லையம்பதியின் எல்லையினமைந்த நந்தவனத்தினை வருணிக்கும் சேக்கிழார்சுவாமிகளும் முன்னோர்மரபின்வழிநின்று மரப்பெயர்பலவற்றை அழகுபெற அடுக்கிச்செல்கின்றார். அவரளித்த செய்யுள் வருமாறு:—

"நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ் நாளி கேரமில வங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல எங்கு நெருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி மீது கோகில மிடைந்து மிழற்றப்
போக பூமியினு மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை கடந்து புகுந்தார்"

"வன்னிகொன்றைவழைசண்பக மாரம் மலர்ப்ப லாசொடுசெருந்தி மந்தாரம்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை கற்பு பாடலங் கூவிள மோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல் துதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்மலர்ப்புனித நந்த வனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்"

வண்டினதுரீங்காரமும் குயிலின் இசையும்பொழிலுக்கு அழகு செய்வன. நக்கீரனார் இரண்டினையும் கூறினார்; சேக்கிழார்சுவாமிகள் கோகிலத்தைமாத்திரம் கூறுகின்றார்.

நிலவும் பொழிலும் தனித்துநின்று பயக்கும் அழகினிலும் பார்க்க ஒருங்கியைந்துநின்று தரும் அழகு சிறந்ததென்னும் உண்மையினையும் இப்பொருளுரையில் ஒருசிறிது காட்டினம்.

---

# கம்பராமாயணசாரம்

[ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

எசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## சீதை களங்காண்படலம்

போர்க்களத்தில் உயிரிழந்துகிடந்த இலக்குமணனைக்கண்டு, துயர்மிகுந்து, உயிரொடுங்கிக்கிடந்த இராமனையும் அந்த இலக்குமணனையும் சீதை கண்டதைக் கூறுவது.

### போர்க்களத்தில் உயிரொடுங்கிக்கிடந்த இராமலக்குமணரைச் சீதை காணுதல்

[ இராமலக்குமணுதியர் இறந்தாரென்று தூதர்சொல்லக்கேட்ட இராவணன், 'அவர்கள் பொய்கூறுர்: அவர்கள் சொல்லியது உண்மையே'யென்று கருதி, மனத்துளடங்காது பொங்கியெழுந்த பெருமகிழ்ச்சியுடையவனுகி, அவர்கள் வெறுக்குமளவு வெகுமதியளித்து, 'எதிரிகளெல்லாரும் இறந்த இனியசெய்தியை யானைமேல் முரசேற்றியறைந்து (சீதையையுள்ளிட்ட) இலங்கைநகரத்துள்ளாரெல்லாரும் அறியும்படிசெய்து, இராக்கதரெல்லாரும் எண்ணெய்தேய்த்து மங்களமுழுக்கு முழுகி வெற்றிவிழாக்கொண்டாடும்படிசெய்க' எனக் கட்டளையிட்டான். பின்பு, போர்க்களத்திற்கிடக்கும் இராமலக்குமணுதியரைச் சீதை காணும்படிசெய்யக் கருதி, (அங்கே இராக்கதரும் இறந்தாரென்பதை அவள் அறியாதபடிசெய்தற்கு, சனகவுருக்கொண்டு சானகியை மயங்கச்செய்த) மருத்தனை அழைத்து, 'முற்பட்டு நீபோய்ப் போர்க்களத்திற்கிடக்கும் இராக்கதருடல்களையெல்லாம் தூக்கிக்கொண்டுபோய்க் கடலிலே வீசியெறிந்துவிடு. இது இரகசியமாகச் செய்யப்படவேண்டியது. பிறர் அறிந்தால், உனக்கு நான் அளித்திருக்கும் பெருமைகளோடு உன் தலையையும் வாங்கிவிடுவேன்' என்று கூறினுன். மருத்தன் அப்படியே செய்தான். பின்பு, இராவணன், (சீதைக்குக் காவலாயிருந்த) அரக்கியரை அழைத்து, 'இராமலக்குமணர்

இறந்ததை நேராகக்கண்டாலன்றிச் சீதைக்குச் சந்தேகம் தீராது. அவளைப் புட்பகவிமானத்திலேற்றிப் போர்க்களத்துக்குக்கொண்டு போய்க் காட்டுங்கள்' என்று கட்டளையிட, அவர்கள், அவ்வாறே செய்தார்கள். ]

142 கண்டாள் கண்ணுற் கணவனுரு வன்றி யொன்றுங்[1] காணுதாள்
உண்டாள் விடத்தை யெனவுடலு முணர்வு முயிர்ப்பு[2] முட னோய்ந்தாள்
தண்டா மரைப்பூ நெருப்புற்ற தன்மை யுற்ற[3] டரியாதாள்[4]
பெண்டா னுற்ற பெரும்பீழை[5] யுலகுக் கேல்லாம் பெரிதன்றே.[6]

கொண்டுகூட்டு: (சீதை இராமனைக்) கண்ணுற்கண்டாள்; கணவன் உருவன்றி ஒன்றுங்காணுதாள் (ஆயினள்.) விடத்தை உண்டாளென உடலும் உணர்வும் உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்; தண் தாமரைப்பூ, நெருப்பு உற்ற தன்மை உற்றுள்; தரியாதாள் (ஆன அந்தப்)பெண் உற்ற பெரும்பீழை, எல்லா உலகுக்கும் பெரிதன்றே?

பொருள்: (சீதை, இறந்தானென்றெண்ணும்படி போர்க்களத்திலேகிடந்த இராமனைக்) கண்டாள்; கண்டபோது, அவள் தான் கண்ட தன் கணவனுருவன்றி வேறொன்றையும் காணுதவளாயினுள்; (கண்டசெய்கை விடத்தையுண்டசெய்கையாக,) விடத்தை யுட்கொண்டவள்போல உடம்பும் உணர்வும் மூச்சும் ஒருசேர ஓய்ந்தாள். (வாடிவதங்கி) நெருப்பில்விழுந்த தாமரைப்பூவின் தன்மையை உற்றுள். (தான் உற்ற துன்பங்) தாங்கமாட்டாதவளான (அந்தப்) பெண்(களெல்லாரினுஞ் சிறந்தவள்) அடைந்த துன்பம் உலகத்தினும் பெரிதாயிருந்தது.

உயிர்ப்பு - சுவாசம். தண் - குளிர்ச்சி. தரியாதாள் - (துன்பம்) சகிக்க மாட்டாதவள். பீழை - துன்பம்.

பிரத்தியட்சமாக, நேர்நேராகக் கண்டாளென்பதை வற்புறுத்தியுணரச்செய்வார், 'கண்டாள் கண்ணால்' என்றுர் 'கண்ணுற் கண்டாள்' என்பதனினும் 'கண்டாள் கண்ணால்' என்பது வலியுடையதாயிருத்தல், கவனிக்கத்தக்கது.

மிகக்கொடிய துக்கமுற்றவர், அத்துக்கத்தின்காரணத்தையன்றி வேறொன்றையும் உணராமை இயல்பென்பது விளங்க, உயிரொடுங்கிய கணவனைக் கண்ட சீதை, கணவனுருவன்றி

ஒன்றும் காணுதாள் ஆனுள் என்ருர். இது சிவான்மா, பரமான்மா வைக்கண்டபோது, சருவப்பிரபஞ்சத்தையும் தன்னையும் காணுது' என்ற ஞானிகள்கூற்றை ஞாபகமுறுத்துகின்றது.

விசேடணமின்றி, (வெறுமனே,) 'பூ' என்ருல், அது, பூக்க ளிற்சிறந்த தாமரைப்பூவைக் குறிக்குமெனப் 'பூவெனப்படுவது பொறி (- இலக்குமி) வாழ்பூவே' யென்றவாறு, இங்கே, 'பெண்' என்றது பெண்களிற்சிறந்த சீதையையுணர்த்தியது.

'காலத்திஞற்செய்தநன்றிசிறிதெனினும்,ஞாலத்தின் மாணப் பெரிது' என்பதிற்போல, சீதை உற்ற துன்பத்தின்பெருமையை உணர்த்த, அத்துன்பம் 'உலகுக்கெல்லாம்பெரிது' என்ருர். இறுதி யடிக்கு 'ஒருபெண் அடைந்த பெருந்துன்பம், உலகத்துக்கு மிகப் பெரிதாகத் தோன்றுமன்ரே' என்று பொருள்கூறலும் உண்டு.

பாடபேதம்: [1] என்றும். [2] உயிர்த்தா ளுடலு முணர்வும். [3] ஒத் தாள். [4] தரியாத. [5] பீடை. [6] பெரிதன்றே.

143 மங்கை யழுதாள்[1] வானுட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கி னுறையுங் குயிலழுதாள் பதுமத் திருந்த மாதழுதாள்[2]
கங்கை யழுதா ணமடந்தை யழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கை யழுதா ளிரங்காத வரக்கி மாருந் தளர்ந்தழுதார்.[3]

கொண்டுகூட்டு: மங்கை அழுதாள்: (அவள் அழவே,) வான்நாட்டு மயில்கள் அழுதார்; மழவிடையோன் பங்கில் உறையும் குயில் அழுதாள்; பதுமத்து இருந்த மாது அழுதாள்; கங்கை அழுதாள்; நாமடந்தை அழு தாள்; கமலத்தடங்கண்ணன் தங்கை அழுதாள்; இரங்காத அரக்கிமாரும் தளர்ந்தழுதார்.

பொருள்: (இராமன் உயிரொடுங்கிக்கிடக்கக்கண்டு, பொறுக்க முடியாததுன்பத்தையுற்ற) சீதை அழுதாள். அவள் அழவே [அவளைப் பெற்ற தாயான பூமிதேவி அழுதாள்*] வானுலகத்து மகளிர் அழுதனர்; பார்வதி அழுதாள்; இலக்குமி அழுதாள்; கங்கை அழுதாள்; சாசுவதி அழுதாள்; துர்க்கை அழுதாள்;

* அடுத்தபாட்டில் வருவது.

(இவர்களெல்லாம் அழுததைக் கூறுவானேன்,) இரக்கமற்ற இராட்சசிகளும் மனம் இளகி அழுதார்கள். [புண்ணியம் அழுதது; பாவமும் அழுதது*]

மங்கை, மங்கையருட்சிறந்த சீதையைக் குறித்தது. முந்திய பாட்டுரையில் 'பெண்' என்பதைப்பற்றிய குறிப்பைப் பார்க்க. மயில், குயில், பெண்ணுக்கு உருவகம். மழவிடை - காளை - இள எருது. பதுமம் - தாமரை. நாமடந்தை - சரசுவதி. கமலத்தடங்கண்ணன் - செந்தாமரைப்பூவைப் போன்ற விசாலமான கண்களையுடையவன் (ஆன திருமால்). பார்வதியும் பார்வதியின் அமிசமான துர்க்கையும் திருமாலின் தங்கையெனப்பெறுவர்.

பரம்பொருளின் ஆணமிசம் சிறந்த இராமன், உயிரொடுங்கிக் கிடந்த இலக்குமணனைக்கண்டு துயருற்றபோது, பரமசிவன் முதலியோர் துயருற்றாரென முந்தியபடலத்திற் கூறியவாறு, இந்தப் படலத்தில், பரம்பொருளின் பெண்ணமிசம் சிறந்த சீதை, உயிரொடுங்கிக்கிடந்த இராமனைக்கண்டு துயருற்றபோது, பார்வதி முதலியோர் துயருற்றாரென்றார்.

பாடபேதம்: [1] அழலும். [2] பதுமமலர்மேல் மாதழுதாள், மலர்மேலிருந்தாள் பரிந்தழுதாள். [3] தாமழுதார்.

### துன்பமடைந்த சீதையின் மெய்ப்பாடு

[ அழுத சீதை, சோகமேலீட்டால், நினைப்பும் மூச்சும் நீங்கினாள். இராட்சசிகள், தண்ணீரை முகத்திலே தெளித்துச்செய்த சைத்தியோபசாரத்தால் நினைவுவரப்பெற்றபோது, இராமனைத் திரும்பவும்பார்த்து ('என்கண்களே, என் பிராணநாயகனை இந்நிலையில் பார்க்கும்படியான பாவத்தைச்செய்தீர்களே' என்று) கோபித்துத் தண்டிப்பாள்போலத் தன்கண்களைக் கைகளால் மோதினாள். அச்செயல், கயல்மீன்களைச் சினத்தோடு தாமரைப்பூக்களாற் புடைத்தல்போலத் தோன்றியது. அவள் மார்பிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டாள். நெருப்பில்விழுந்த பூங்கொடிபோல வாடிச் சுருண்டாள். (உள்ளமும் உடம்பும்) வெதும்பினாள்; பதைப்பதைத்தாள்; நடுநடுங்கினாள்; துடிதுடித்தாள்; துள்ளினாள்; சுழன்றாள்;

* அடுத்தபாட்டில் வருவது.

விழுந்தாள்; புரண்டாள்; வேர்த்தாள்; எழுந்தாள்; கையை நெரித்தாள்; (துக்கச்சிரிப்புச்) சிரித்தாள்; ஏங்கினுள். 'நாதா, அயோத்தியர்கோவே, உலகநாயகனே', என்று தொடங்கிப் புலம்புவாளானுள்.

## சீதை புலம்பல்

'அறக்கடவுளே! உன்பால் மிக்க அன்புடையவனும், உனக்குப் புறம்பானுரோடு இம்மியும் சம்பந்தமில்லாதவனுமான என் நாயகனேடு சேராமல், அதருமமேபுரிகின்ற அரக்கர்வசமாயினுயோ! (தருமதேவதையென்றபெயருக்குச் சற்றும் பொருந்தாத) கொடுமையுடையோனே! உன் அருளிருந்தவாறு இத்தன்மையதோ!* ஏ, விதியே! வேதம் விதிக்கும்வழியன்றி வேறெவ்வழியிலும் செல்லாத என் நாயகனுக்குத் துன்பஞ்செய்தாயே! கொடியோனே'. யான் உன்னை மதிக்கமாட்டேன், மதிக்கவேமாட்டேன்; (நல்லார்க்குத் துன்புசெய்தல் உன் இயல்பன்று. அவ்வாருக,) நீ, இவ்வாறுசெய்து விளையாடுகின்ருயோ!† நமனே! இந்தக் கோரமான காட்சியைக் கண்டு சகிக்கமாட்டாதேனுயிருக்கின்றேன். அபயம் அபயம் (இக்காட்சியை நான் காணுதபடி) என் உயிரைக் கொள்வாயாக‡.

என் ஆருயிர்நாயகனே! அருள்வள்ளலே! என்றும் விடியாத துன்ப இருளிலே என்னை எறிந்துவிட்டாயே§. ]

---

*மறமேபுரி வார்வசமா யினையோ
அறமேகொடி யாய், இது வோஅருள் தான்!
(மறம் - அதருமம்)

†மதியேன்மதி யேன்உனை வாய்மையிலா
விதியே!கொடி யாய்விளை யாடுதியோ!
(வாய்மை - உண்மை)

‡கொடியேன்இவை காண்கிலன் என்உயிர்கோள்
முடியாய்நம னேமுறை யோமுறையோ!
உயிர்கோள் முடியாய் - உயிர்கொள்ளுதலை நிறைவேற்றுவாயாக.

§விடியாஇருள் வாய்எனை வீசினையே
அடியேன்உயி ரே,அருள் நாயகனே!
இருள்வாய் - (துன்ப) இருளிலே.

144 எண்ணுவுயி ரோடு[1] மிருந்ததுநின்
புண்ணுகிய மேனி பொருந்திடவோ[2]
மண்ணேருயி ரேயிமை யோர்வலியே
கண்ணேயமு தேகரு ணுகரனே[3].

கொண்டுகூட்டு: மண்ணோர் உயிரே! இமையோர்வலியே! கண்ணே! அமுதே! கருணுகரனே! எண்ணு(மல்) உயிரோடும் இருந்தது, நின் புண்ணுகியமேனி பொருந்திடவோ?

பொருள்: உலகத்தார்க்கு உயிர்போன்றவனே! தேவர்களுக்கு (ப் பகையையொழிக்கும்) வலிமையானவனே! எனக்குக் கண்ணனவனே! (எல்லாருக்கும்) அமுதம்போல் இனிமையானவனே! கருணுகரனே! (நீ சுகசரீரியாய்ச் சேமமாயிருப்பாய். அந்நிலையில் உன்னை அடையலாமென்ற ஆசையால், எனக்கு நேர்ந்த துன்பத்தைத் துன்பமாக) நினையாமல் (இன்றுவரையும் யான் இறவாமல் உயிரோடிருந்தேன். அப்படி) உயிரோடிருந்தது, உன் புண்பட்ட (உயிரற்ற) மேனியைப் பொருந்துதற்குத் தானே!

'அஞ்சாப்புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு' என்பதில், 'அஞ்சாமல்' என்பது 'அஞ்சா' என நின்றதுபோல, இங்கே 'எண்ணுமல்' என்பது, 'எண்ணு' என் நின்றது. மெய் - மேனி - உடம்பு. 'எண்ணு' என்பதற்கு 'உனக்கு எதிரிகளால் இந்தநிலை நேருமென்றெண்ணுமல்' என்றும் பொருள்கூறலாம். இராமன் ஆயுதத்தாலன்றித் துக்கமேலீட்டால் உயிரொடுங்கிக்கிடந்தானென்பதையறியாமல், அம்புபட்டிறந்தானென்று தவருக எண்ணியதனல், 'புண்ணுகிய' மேனியென்ருள். அவன் புண்படவில்லையென்ற உண்மையை இதன்பின் திரிசடைதெரிவித்தபோது தெரியலானுள்.

பாடபேதம்: [1] மயலோடும், மெயினேடும். [2] பொருந்துறவோ. [3] கருணுகரனேயமிழ்தே.

[ 'நீ பாவியேனைப் பாணிக்கிரகணம்பண்ணியது, உன் உயிருக்கு ஊறுண்டாகத்தானே? உனக்கு இந்தநிலை நேர்ந்ததை அறிந்தபோது, உன் தாயும் தம்பியரும் உயிர்வாழார். கைகேசி உன்னைக் காட்டுக்கனுப்பியது இவ்வாறு நேர்ந்துதீருமென்ற கருத்துக்கொண்டுபோலும்!* நீ காட்டுக்குப் புறப்படும்போது, என்னை

* 'கைகேசி கருத்திது வோ! களிறே.' களிறு - யானை (போன்றவன்).

'அயோத்தியிலே தங்கியிரு' என்றபடி செய்யாமல் நான் காட்டுக்கு வந்ததும், மாயமானைப்பிடித்துக்கொடுக்கச்சொன்னதும் எனக்குப் பாதுகாவலாக நீ விட்டுப்போன இளையபெருமாளை என்னைத் தனியேவிட்டு நீ இருந்த இடத்துக்கு வருமாறு அனுப்பியதுமான என்செயல்களே, உங்கள் முடிவுக்குக் காரணமாயிருந்தன. ஆதலால் அச்செயல்களை உங்களை எதிரிகள் கொல்லும்படி குறித்துச் செய்தவள்போல்கின்றேன்.

('தன்கணவனுருவன்றி ஒன்றுங் காணுதாள்' ஆன சீதை தனக்குக் காவலாகநின்ற இலக்குமணனைக் கடிந்து தன்னைத் தனியே விட்டுப்போகச்செய்த, 'சுயங்கிருதானர்த்த' மென்ற தனக்குத் தானே கேடுவிளைத்தசெயலால் இராமனுக்கு இக்கதிநேர்ந்ததென நினைவுவந்தபோது, இராமன்பக்கத்தே கிடந்த-அந்நினைவுவருமளவுங் காணுத-இலக்குமணனைக் கண்டு) 'இளையபெருமாளே! (நீ எங்களுடன் காட்டுக்குப் புறப்பட்டபோது) உன்மாதா "உன் அண்ணனுக்கு முடிவுநேர்வதாயிருந்தால், அவனுக்குமுன்னம் முடிவாயாக"* என்று சொன்னபடியே செய்தாயோ! (நாட்டில் அரசமாளிகையிலே மலர்மெத்தைமீதே கண்வளர்தல் நீங்கிய நீ, காட்டில் எங்களை இடைவிடாது காத்தற்பொருட்டுத்) தூக்கத்தை அறவே துறந்தாய். அப்படிப்பட்ட நீ, இப்பொழுது அம்புப்படுக்கைமீதே தூங்குகின்றுயோ.' (என்று புலம்பிவிட்டுத் திரும்பவும் இராமனை நோக்கி) ' "நெடுங்காலம் அரசாள்வாயாக." என (இந்தச்சென்மத்தில்) பெரியோர் உன்னை வாழ்த்தின வாழ்த்தும் (முன்சென்மங்களில்) நீ பண்ணிய புண்ணியபலமும் பாவியேனைப் பாணிக்கிரகணம்பண்ணினதனுற் பலியாமற்போயினவே'! என்று பிரலாபித்தாள்.

---

*'............மகனே, இவன் பின்செல் தம்பி
என்னும் படியன் றடியாரினில் ஏவல் செய்தி,
மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா அதன்றேல்
முன்னம் முடி என்றனள்.....................'

(நகர்நீங்குபடலம்-௧௫௧.)

## இராமன்மேல்வீழ்ந்து இறக்கத்தொடங்கிய சீதையைத் திரிசடை தடைசெய்தல்

(பிரலாபித்தவள்,) 'என் துன்பம் ஒழியும்படி என்நாயகன்மேல் விழுந்து இறந்திடுவேன்' என்றுகருதி யெழ, (அவள்கருத்தைக் குறிப்பாலுணர்ந்த) திரிசடை,(அவள் விமானத்தைவிட்டுக் குதித்து விடாதபடி) தழுவிக்கொண்டு, சூழநெருங்கிநின்ற அரக்கிமாரை நோக்கி(க் கண்சைகையால்) ஒதுங்கிநிற்கும்படிசெய்து, (வேறு யாரும் கேளாதபடி) காதினுள்ளே சொல்லலானுள்:—

'தாயே! மாரீசனை மானுகவும் மருத்தனைச் சனகனுகவும் விடுத்த மாயத்தையும் நாகபாசம் நீங்கினதையும் நினைப்பாயாக. அறநெறியற்ற அரக்கர் இயற்றும் மாயத்தை அறிந்தும் அறியாய் போல்கின்ருய். இராவணுதியர்க்குக் கேடும் (இராமனுதியர்க்கு நன்மையும் நேர்வதை முன்னறிவிக்கும்) நல்ல கனவுகளும் நல்ல நிமித்தங்களும் நமக்குத் தோன்றியிருப்பவைகளையும் இராமன் வீரத்தையும் எண்ணிப்பார், அறத்தைநிறுத்த அவதரித்த திருமாலான பெருமானுக்கு இழிஞரான இராக்கதரால் இறுதிநேருமோ? உன்நாயகன் உடம்பில் யாதோரம்பும் ஏதேனும் ஊறுசெய்யாதிருப்பதைக் காண்கின்ருயில்லையோ? இளையபெருமாள்முகம் கற்பாந்தகாலத்துக் கதிரவன்போல மிளிர்கின்றது. ஆதலால் இருவரும் இறுதியடையவில்லை. வீணுக மனங்கலங்கவேண்டாம். உண்மையாக, இராமன் இறந்திருந்தானுனல், ஈரேழுலகங்களும் இறுதியடைந்திருக்கும். அவைகள் அழியாதிருத்தலால், அவன் ஆவிநீங்கினனல்லனென்பதும், அறம் நிலைத்திருக்கிறதென்பதும் நிச்சயம். ("இன்றுபோல என்றும் இருப்பாயாக" என்று, நீ வாழ்த்தி) அளித்த வரத்தினுல் அனுமானுக்கு ஆருயிர் நீங்கவில்லை. இப்போது காணப்படும் விபத்து, பிரமாத்திரத்தினுல் நேர்ந்தது. அந்த அத்திரம் அகன்றுவிடும். நாயகரையிழந்த நங்கையரைத் தாங்காது தள்ளிவிடும் இந்தத் தெய்வவிமானம் உன்னைத் தாங்கிக் கொண்டிருத்தலால் நீ சுமங்கலியென்று துணிவாயாக' என்று கூறினுள்.

## சீதை, திரிசடைக்குக் கூறுதல்

(திரிசடைகூறிய ஆறுதலும் தேறுதலும் செய்யும்வார்த்தைகளைக்கேட்ட) சீதை, 'என் அன்னையே! இதுவரையும் நீ சொன்னது ஒன்றும் பழுதுபடவில்லை. ஆதலால், இந்த இரவு முடியுமளவும் இறவாதிருக்கின்றேன். (விண்ணிலே வானவில்லொடுகூடிய மேகம்போல, மண்ணிலே) கோதண்டத்தோடுகூடிய மேகத்தைக் காணலாமெனும் ஆசையினல், (இராவணன் என்னைக் கவர்ந்த கணமே விட்டுவிடக்கடவதாயிருந்த) என்னுயிரை விடாதுநிறுத்தி வைத்திருந்தேன்' என்று கூறினள். ]

145 தையலை யிராமன் மேனி தைத்தவேற்[1] றடங்க ணாளைக்
கைகளிற்[2] பற்றிக் கொண்டார்[3] விமானத்தைக்[4] கடாவுகின்றார்
மெய்யுயி ருலகத் தாக[5] விதியையும் வலித்துச்[6] செல்லும்
பொய்யுடல் கொண்டு செல்லு நமனுடைத் தூதர்[7] போன்றார்[8].

கொண்டுகூட்டு: தையலை, இராமன் மேனி(யில்) தைத்த வேல் (போலும்) தடம் கண்ணாளைக் கைகளில் பற்றிக்கொண்டார் (ஆகி) விமானத்தைக் கடாவுகின்றார் (ஆன இராட்சசிகள்) மெய்(யான) உயிர் உலகத்(த)து ஆக, விதியையும் வலித்துப் பொய்(யான) உடல்கொண்டு விண்மேற்செல்லும் நமன் உடை(ய) தூதர்போன்றார்.

பொருள்: இராமன் திருமேனியிலே(ஊன்றிப்)பதிந்த பார்வையுடையவளாயிருந்த சீதையைக் கையைப்பற்றிக்கொண்டு விமானத்தை (அசோகவனத்துக்குத் திருப்பிச்) செலுத்திய இராட்சசிகள், உயிர் மண்மீதுள்ளதாக, உடலை விண்மீதாகக்கொண்டுபோகும் காலதூதர் (இலர்; அப்படிப்பட்ட காலதூதர் உளரானல், அவர்) களைப்போன்றார்கள்.

தையலை - பெண்ணை, சீதையை. வேல் தடம் கண் - வேல்போன்றதும் விசாலமுள்ளதுமான கண். கடாவுதல் - செலுத்துதல். வலித்தல் - பலவந்தப்படுத்தல். நமன் - எமன். 'உடைத்தூதர்' என்பதில் 'உடை', உடைய என்பதன் தொகுத்தல்விகாரம்.

காலமானவருடலைப் பூமியிலே கிடக்கவிட்டு, உயிரைக் கொண்டுபோதல், காலதூதர் செய்யக்கடவதான விதி. அந்த விதிக்கு நேரெதிரிடையாக, உயிரைவிட்டுவிட்டு உடலைக்கொண்டு போம் தூதரை விதியையும் வலித்து (-வன்மையாக நிராகரித்து

மாற்றி)ச்செல்லும் தூதரென்றார். உண்மையாக உடல்கொண்டு போம் எமதூதரில்லையாதலால், 'பொய்யுடல் கொண்டுசெல்லும் நமனுடைத்தூதர்' என்றது இல்பொருளுவமை.

உயிரின் அழியாமையைக்குறிக்க, அதற்கு 'மெய்'யென்ற அடையும் உடலின் நிலையாமையைக்குறிக்க அதற்குப் 'பொய்' என்ற அடையும் கொடுத்தார்.

இராமன் மண்ணிற் கிடக்க, சீதையை விண்ணிற்கொண்டு போனசெயலை, சீதைக்கு இராமன் உயிரென்பதுகொண்டு, 'உயிர் உலகத்(த)தாக..........விண்மேல்.........உடல்கொண்டுசெல்லும்' செயல்போல்வதென்றுகூறினர். காதலர்க்கு உயிர் காதலிக்கப் பட்டார் என்பதுபற்றிக் கம்பராமாயணசாரம் பாலகாண்டத்தில் 'உருத்தெரிதன்மைய' என்ற 170-ஆம் பாட்டுரையிற் கூறியிருப் பதைப் பார்க்க.

இராமனைவிட்டுச் சீதை பிரியும்படி செய்த இராட்சசிகள்செய லுக்கு, ஒன்றாக இணைந்திருக்கும் உயிருடல்களை இரண்டாகப்பிரிக் கும் எமதூதர்செயலையும், பிரித்த ராமசீதையருள் ஒருவரை ஆகாய (வழியே விமான)த்திற்கொண்டுபோதலை, பிரித்த உயிருடல்களுள் ஒன்றை (எமலோகத்துக்கு) விண்ணிற்கொண்டுபோதலையும் கொடிய இராட்சசிகளுக்குக் கொடிய எமதூதரையும் உவமையாகக் கூறிய கவிசாதுரியம் ஊன்றி உணர்ந்து உவத்தற்குரியது.

'நீ (சடாயு) உயிர், நான் (தசரதன்) உடல்' என்றுகூறி நண்பு பாராட்டியிருந்த தசரதன் இறந்ததைக்கேட்டபோது, சடாயு இரங் கிக்கூறிய புலம்பற்பகுதி இங்கே நினைவுக்கு வருகிறது.*

பாடபேதம்: [1] வாள். [2] கையிணைப். [3] கொண்டு. [4] மானத்தை. [5] மெய்யுரை நல்லதாயும். [6] நலிந்து, வலிந்து. [7] தூதிற். [8] போனர்.

சீதை களங்காண்படலம் முற்றிற்று.

[தொடரும்]

---

* உயிர்கிடக்க உடலைவிசும் பேற்றினர் உணர்விறந்த கூற்றி னரே.
(சடாயுகாண்படலம் ௨௩.)

௳

# பண்டைக்காலத்து நாகரிகம்

[ ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B.A., (LOND.) ]

அஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## ஜப்பானியர்

சீனதேசத்திற்கு வடகிழக்கில் நான்கு பெருந்தீவுகள் உள. அத்தீவுகளில் வசிப்போர் ஜப்பானியர் எனப்படுவர். அந்நான்கு தீவுகளையும் சுற்றியிருக்கும் 3000 சிறுதீவுகளும் ஜப்பானியருக்கே உரியன. ஜப்பான்தீவுகள் சுதந்திரமானவை. ஆங்கு வானம் பிழையாது மாதந்தோறும் மழைபெய்யும். கொறியர் ஜப்பான்தீவுகளில் குடியேறியிருக்கலாம். சீனர் ஜப்பான்தீவுகளில் குடியேறியதாகத் தெரியவில்லை. தீவுகளில் உறைவோர் மீன்படுத்தல் இயல்பே. ஜப்பான்கடல் 240 மைல் நீளமும் இயற்கைவனப்புமுடையது என்ப. ஜப்பான்தீவுகளில் 51 எரிமலைகள் உண்டு. ஒரு ஆண்டில் அவண் 500 வரை பூகம்பங்கள் நிகழும். பூகம்பம் நிகழ்ந்தால் தீயாலும் நீராலும் அழிவுநேரிடும். ஜப்பானியர் கருமயிரினர், மஞ்சள்நிறத்தினர், சிறிய உருவினர்; 5 அடியினும் உயர்ந்து வளரார்; வட்டமுகத்தினர்; தடித்த உதட்டினர். ஜப்பானியர் தம் உடம்பையும் இல்லத்தையும் சுத்தமாக வைத்திருப்பர். உலகில் பிறசாதியார் ஒருவரும் ஜப்பானியரளவு சுத்தத்தைப் பொருட்படுத்தவில்லை என்பர் மேனாட்டார். ஜப்பானியத் தாய்மார் தம் பிள்ளைகளை அரசபக்தி உடையவர்களாக வளர்த்தலோடுநில்லாமல் அகச்சுத்தம், புறச்சுத்தம் இரண்டையும் குறிக்கொள்ளும்படியும் வீரத்தைப் போற்றும்படியும் கற்பிப்பர். அன்னியருக்கு ஜப்பானியர் மிகமரியாதைகாட்டுவர். ஜப்பானியர் போர்ப்பிரியர், போர்க்களத்திற் சிறைபாதலினும் இறத்தலை விரும்புவர்; எசமானன் இறந்துழி அவனுடைய பணியாளரும் இனத்தோரும் துஞ்சுவர். கி. பி. 646-ல் இவ்வழக்கம் கண்டிக்கப்பட்டது. ஜப்பானியருக்கு கி. பி. 8-ஆம் நூற்றாண்டுவரையும் எழுத வாசிக்கத் தெரியாதிருந்தது.

ஜப்பானியர் தம் முதல்வேந்தன் பெயர் சிம்மு எனவும் அவன் கி. மு. 660-ல் ஆண்டனனெனவும் கூறுப. ஜப்பானியருடைய வரலாற்றைக் கொறியருடைய வரலாற்றுடனும் சீனருடைய வரலாற்றுடனும் உற்றுநோக்கினுல் ஜப்பானியருடைய வரலாறுகள் சில நம்பத்தக்கவையல்லவென்பது வெளிப்படையாகும். கி. பி. 500-ல் தான் ஜப்பானியர் சீர்திருந்தியநிலையடைந்தனர் எனக் கூறலாம். என்னை? கி. மு. 220-ல் ஜப்பானியர் சீனவேந்தருக்குத் தூது அனுப்பியதாகவும் சீனர் ஜப்பானியரைக் கானவர் என எண்ணிப் பொருட்படுத்தாதுவிட்டனர் எனவும் சீனருடைய வரலாறுகள் கூறுநிற்கும்.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் ஜப்பானியர் மாடு குதிரை முதலிய நாட்டுமிருகங்களை உபயோகிக்கத் தெரியாதிருந்தனர். ஜப்பானியருடைய போர்க்கருவிகள் அம்பும் வில்லுமே. ஜப்பானியர் பச்சைகுத்தித் தம் முகத்தின் அழகைக்கெடுத்தனர். தலைமயிரைக் குடுமியாக முடிந்தனர். காலணியின்றியே நடந்தனர்; கையாலேயே சாப்பிட்டனர். களவென்பதை ஜப்பானியர் கேட்டும் அறியார்; நீதிமன்றங்களில் வழக்குரைத்தலையும் மிகவெறுத்தனர். ஜப்பானியப்பெண்டிர் தம் கற்பை நனிகாத்தனர்; தம் கொழுநர்க்குத் தொண்டுசெய்ய முன்னிற்பர். ஆதிகாலத்தில் மாந்திரிகப் பெண் பிறிகு அரசுசெலுத்தி 1000 ஏவலாளரைக்கொண்டு பணி செய்வித்தனள் எனக் கூறுப.

ஜப்பானியருடைய சரித்திரத்தின்படி பத்தாம்வேந்தன் சுஜின் (கி. மு. 97—30) நெல்வயல்களுக்கு நீர்பாய்ச்சுதற்கு ஒரு வாய்க்காலை அகழத்தொடங்கினன். அவ் வாய்க்காலைச் சுயிமின் என்பவன் கி. பி. 70-ல் கட்டிமுடித்தான். கி. பி. 201-ல் இராணி ஜிங்கோ கோக்ஸ் கொறியாமீது படையெடுத்தனள். அவளுடையமகன் ஒஜின் கொறியர்நாகரிகத்தையும் முன்னோர்வழிபாட்டையும் பரப்பினன்.

## ஜப்பானியரின் அரசியல்

குடிகள் தலைமைக்காரருக்கு அமைந்தும் தலைமைக்காரர் வேந்தனுக்கமைந்தும் ஒழுகினர். ஜப்பானியர் சீனரைப்பின்பற்றித்

தம் வேந்தரைத் தெய்வமென எண்ணி அவர்களை அணுகவில்லை. வேந்தன் தன் மாளிகையில் வசித்தனன். வேந்தனைக் காணவே முடியாது. மேன்மக்களே அரசியலை நடாத்தினர். கி. பி. 689-ல் நீதிப்பிரமாணங்கள் வகுக்கப்பட்டன.

கி. பி. 900 முதல் 1200 ஈறாக பூஜிவாரா சுகவரா என்னும் இருமேன்மக்கட் குடும்பத்தினர் இருகட்சியராகப் பிரிந்து போராடினர். தையரா என்பவன் செங்கொடியுடனும் மீனமத்து என்பவன் வெண்கொடியுடனும் இருகட்சிக்கும் தலைவராகிப் போரைநடாத்தினார்கள் முடிவில் மீனமத்து தையராவை வென்றான். கி. பி. 1220-ல் அரசியலை நடாத்திய ஹேஜஸ் குடும்பத்தலைவன் ஷோகன் என்னும் பட்டப்பெயரைப் பெற்றான். கி. பி. 1275-ல் மங்கோலியநேமிவேந்தன் குபிலைக்கான் ஜப்பானைப்பிடித்தற்குப் படையெடுத்தனன். அவனுடைய கப்பல்கள் புயலில் அகப்பட்டு உடைந்தன. கி. பி. 1334-ல் ஹேஜஸ்குடும்பம் ஷோகன் என்னும் அமைச்சுப்பதவியை இழந்தது. ஜப்பானியவேந்தன் பட்டம் மிக்காடோ என்பது. கி. பி. 1400-ல் கோடியாகோ என்னும் மிக்காடோ காமாநகரைத் தலைநகராக்கினான். பின்பு வடபகுதியில் ஒரு வேந்தனும் தென்பகுதியில் மற்றொரு வேந்தனும் அரசாண்டனர்.

கி. பி. 1536-ல் இடியோஷி என்னும் குடிமகன் ஒருவன் நோபநாகன் என்னும் தலைவன்கீழ்ச் சேவித்தனன். இடியோஷி நோபநாகன் இறந்தபின் அவனுடைய குமாரரோடு பொருது எடோ என்னும் இடத்தில் இருந்து அரசாண்டான். கி. பி. 1592-ல் இடியோஷி கொறியாதேசத்தின்மீது படையெடுத்து அதன் தலைநகரைப் பிடித்தான். ஜப்பானியருடைய கப்பல்களைக் கொறியர் உடைத்தனராக, ஜப்பானியர் தம்நாடு திரும்பினர். இடியோஷி தன்குடிகள் கிறிஸ்துமதத்தைத் தழுவக்கூடாதெனக் கட்டளையிட்டனன். கி. பி. 1598-ல் இடியோஷி இறந்தான்.

ஐயயாசு கி. பி. 1542—1616.

இடியோஷியின்மகன் இடியோரியை ஐயயாசு என்பவன் வென்று கி. பி. 1603ல் ஷோகன் என்னும் பதவியைப் பெற்றான்.

பின்னரும் இடியோரி படை சேர்த்தானாக, அவனை கி. பி. 1615ல் ஐயயாசு வென்றான். கி. பி. 1616ல் ஐயயாசு இறந்தான். ஐயயாசு செங்கோல்செலுத்தியகாலை பிரான்சிஸ் சேவியர் என்னும் கதலிக்கர் குருவும் ஏனைய கதலிக்கரும் ஒல்லாந்தரும் ஜப்பான்தீவுகளில் இறங்கினர் எனவும் ஆங்கு உபசாரம் பெற்றிலரெனவும், நாட்டை விட்டு நீங்கும்படி கட்டளைபெற்றனரெனவும் தெரிகிறது. ஐயயாசுவின்காலத்து மேன்மக்கள் டேமியர் என்போரும் சமூரியர் என்போரும் என இருவகுப்பினராயினர். சமூரியர் டேமியரினும் செல்வத்தால் குறைந்தோர். இச் சமூரியர் என்போர்க்குப் பொதுக் குடிகளாகும் கமக்காரர் அரசிறைகொடுத்தனர். ஷோகன், டேமியர் சமூரியர் என்னும் மேன்மக்களின் துணையோடு அரசியலை நடாத்தினான். மிக்காடோ யாதொரு அதிகாரமுமின்றிப் பெயரளவில் வேந்தனாயிருந்தனன். ஜப்பானியர் நவசுவர்க்கங்கள் உண்டென நம்பினராகலின் தம்வேந்தருடைய மாளிகையிலும் இல்லங்கள் ஒன்பதுபிரிவினவாகக் கட்டினர். மாளிகை 12 வாயில்களை உடையதெனவும் 80 சாலைகள் உடையதெனவும் கூறப்படும். வேந்தனுடைய தேர் 10,000 என்ப. வேந்தனுடன் பேசவிரும்பும் மேன்மக்கள் ஷோகன் மூலமாகவே பேசலாம்.

இதுநிற்க, ஐயயாசு, எகிஜின் இற்றுடா கீயி ஓவாரி மிற்றோ என்னும் ஐந்து குமாரரைப் பெற்றான். எகிஜின் இடியோஷியால் தனது உரிமைக்கு உரியன் என நியமிக்கப்பட்டமையால் தந்தையின் உரிமையை இழந்தான்; மிற்றோ பகைவர்குலத்தில் மணமுடித்தமையால், உரிமையிழந்தான். ஐயயாசு ஷோகன்பதவியைத் தன் மகன் இற்றுடாவுக்கு அளித்தான். அவனுக்குச் சந்ததியில்லாவிடின், கீயி ஓவாரி என்போரின் சந்ததியார் உரிமைபெறுவர். ஆனால் மிற்றோ ஷோகனைப் பட்டத்தைத் துறக்கச்செய்யும் அதிகாரமும் வேந்தனுடன் நேரேபேசும் உரிமையும் பெற்றனன். கி. பி. 1661-ல் மிற்றுகூமி என்பான் ஜப்பானியர்சரிதையை விரிவாக எழுதினான்.

இற்ருடாவின்மகன் ஜயமிக்கு என்பான் அரசியலை முறைப்படி நடாத்தினன்.

கி. பி. 1715-ல் இற்ருடாவின்சந்ததி அற்றதாக, ஓயி என்பவனுடைய சந்ததியார் ஷோகன்பதவியைப் பெற்றனர். ஜப்பானில் தலைமைக்காரரின் இராசதானிகளே நகரங்களாயின. நகரங்கள் நகரசங்கமின்றி யிருந்தன. ஜப்பானியருள் போர்த்தொழிலை வழிவழியாகச்செய்யும் க்ஷத்திரியரே முதல்வருணத்தினர்; கலைஞரும் மருத்துவரும் வித்தைவல்லோரும் பூசாரிகளும் கமக்காரரும் வணிகரும் இடைவருணத்தினர்; கடைவருணத்தவர் கூத்தரும் இழிதொழிலாளரும். மூத்தமகனுக்கே தந்தையின் உரிமைகள் அளிக்கப்பட்டன. தந்தையின் தொழிலை வருணந்தவருமல் மகன் செய்தல் மரபு. இவ்வண்ணம் வருணம் காக்கப்பட்டதெனினும் சாதிவேற்றுமை பாராட்டப்படவில்லை.

## ஜப்பானியரின் சமயம்

ஜப்பானியர் தம் மூதாதையரை வணங்கினர். அவர் மதம் ஷிந்தோமதமெனப்படும். கி. பி. 552-ல் கொறியர்வேந்தர் புத்தரின்படங்கள் சிலவற்றை மிக்காடோ கிமிலி என்பானுக்கு அளித்தான். கி. பி. 673-ஆம் ஆண்டுக்கும் 686-ஆம் ஆண்டுக்கும் இடையிட்டகாலத்தில் பௌத்தமதம் வளர்ந்தது. கோபோதைஷி என்னும் அருச்சகன் 8-ஆம் நூற்ருண்டில் சீனவில் பிரயாணஞ்செய்து எழுத்துக்கற்றுத் திரும்பினன். அவனே ஜப்பானியரை எழுதப் பயிற்றினன். பின்பு மூதாதையர் வழிபாடும் புத்தர்வழிபாடும் கலந்தன. கட்சிப்போர் நீடித்து நடந்தகாலத்தில் பௌத்தமதம் நனிபரம்பியது. ஷோகர் யாவரும் பௌத்தமதத்தை வளர்த்தனர். கி. பி. 1571-ல் பௌத்தசங்கங்கள் சிதைந்தன. ஷோகனுடைய ஆதிக்கம் குன்றப் பௌத்தமதமும் குன்றியது. கி. பி. 1870-ல் மிக்காடா பௌத்தமதத்தைக் கண்டித்து மூதாதையர்வழிபாட்டிற்குப் புத்துயிர் அளித்தான்.

## கிறிஸ்துமதம்

கி. பி. 1581-ல் ஜப்பானில் கிறிஸ்தவர்கோயில்கள் 200 இருந்தன. ஐயயாசு ஷோகன்பட்டம் பெற்றவுடன் கிறிஸ்தவரைத் துன்புறுத்தினன். அவனும் இற்ருடாவும் அந்நிய கிறிஸ்தவரைக் கொல்லும்படி ஏவினர். அரசியற்குழப்பங்களால் பௌத்தமதமும் வலிகுன்றியதாக, கதோலிக்கமதம் ஜப்பானில் வேரூன்றியது. அக்காலத்தில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வருத்தப்பட்டனர். கி.பி. 1873-ல் ஜப்பானியர் கிறிஸ்தவரைத் துன்புறுத்தப்படாதென மிக்காடா கட்டளேயிட்டான். ஒல்லாந்தரே ஜப்பானியரோடு நட்புப்பூண்டு பண்டமாற்றுச்செய்யும் உரிமைபெற்றிருந்தனர். பின்னர் அமெரிக்கரும் மேனுட்டார்யாவரும் போர்முரசறைந்து ஜப்பானியரை வெருட்டி வணிகவுரிமை பெற்றனர். கி. பி. 19-ஆம் நூற்ருண்டின் இறுதியில் வேந்தனுடைய கட்சிக்கும் ஷோகனுடைய கட்சிக்கும் போர் ஆரம்பித்தது. பொதுசனங்கள் வேந்தனேயும் மேன்மக்கள் பலர் ஷோகனேயும் சார்ந்தனர். முடிவில் வேந்தர் தம் உரிமையைப் பெற்றனர்; மேன்மக்கள் தம் பதவியை இழந்தனர். கி. பி. 1852-ல் முற்ரேகிற்ரே 123-ஆம் வேந்தனுயினுன். அவனுடைய தலேநகர் டோக்கியோ. ஜப்பானியர் மேனுடுசென்று மேனுட்டாரின் அரசியல்முறை போர்முறைகளேப் பயின்று தம் நாட்டைச் சீர்திருத்தினர். தலேமைக்காரருடைய அதிகாரம் கெட்டது. மேன்மக்கள் குன்றக் குடியரசு ஏற்பட்டது. நல்லரசு ஏற்பட்டதாகக் கல்வி வளர்ந்தது. ஜப்பானியர் மேனுட்டு யந்திரங்களேச் செலுத்தவும் தாம் அவற்றை ஆக்கவும் பயின்று தமது இராச்சியத்தை ஒரு வல்லரசாக்கினர். ஜர்மானியருடைய போர்முறைகளில் ஜப்பானியர் பயின்றனர். ஜப்பானியர் ஆங்கிலரின் நட்புப்பெற்று ருஷியரை கி. பி. 1904-ல் வென்றனர். ஜப்பானியர் 50 ஆண்டுகளில் அரசியலேத் திருத்தியதுமன்றி மேனுட்டுக்கலேகளேயும் கற்று மேனுட்டாருக்கு நிகராகி மேனுட்டாரை அச்சுறுத்தியது வியப்பினே விளேக்கின்றது.

---

## சீனர்நாகரிகம்

சீனர் தம் நாகரிகம் சாலச்சிறந்ததெனவும் தாமே இப்பூவுலகில் சீர்பெற்று வாழும் மக்களெனவும் தம் சுதந்திரத்தைத் தாம் ஒரு பொழுதும் இழந்திலரெனவும் பிற சாதியாருக்குத் தாம் அஞ்ச வேண்டியதில்லை எனவும் தம் ஆழிவேந்தர் தேவகுலத்தினரெனவும் நம்பியிருந்தனர். இது எங்ஙனமாயினும், சீனர் இற்றைக்கு 5000 ஆண்டுகட்குமுன்னரே பெரியதோர் இராச்சியத்தை நாகரிகமுறையாக நடத்தினர் என்பதற்கு ஐயமில்லை. உரோமர் சீனரோடு வணிகம் செய்தனரெனவும் அவர்களைச் சீனரெனவே அழைத்தனரெனவும் உரோமருடைய வரலாறுகள் கூறுநிற்கும். பண்டம் மாறுதற்கும் சமயநூல்கற்றற்கும் சீனர் இந்துநாடுகளுக்கு வந்தனர் எனத் தெரிகிறது. தமிழரோடு தாம் செய்த வணிகத்தைப் பற்றிச் சீனர் தம் மொழியில் எழுதிவைத்த செப்பேடுகள் சில கிடைக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம் தொண்டி முதலிய துறைகளில் சீனர் இறங்கி மிளகு முத்து முதலிய பண்டங்களைக் கலங்களில் ஏற்றிச்சென்றனர் என அவ்வேடுகள் உரைக்கின்றன. மங்கோலிய சீனரே முதன்முதல் அச்சிடுதல் பயின்றனரெனவும் வெடிமருந்தையரைத்து அக்கினிப்படையை உண்டாக்கி உபயோகித்தனரெனவும் அறியக்கிடக்கின்றது.

## சீனதேயம்

சீனதேயத்தில் பண்டு எரிமலைகளும் நிலக்கரியும் இரும்பும் அதிகம் உண்டென மட்கண்டநூலோர் மொழிப. சீனநன்னாடு நிலவளமும் நீர்வளமும் உடையது; கமத்தொழில்செய்தற்குத் தகுந்தது; கோதுமை நெல் கரும்பு பருத்தி முதலியன விளையும் நாடாகத் திகழ்கின்றது. இங்கு, பட்டு நூற்புடவைகள் பண்டுதொட்டு நெய்யப்படுகின்றன. சீனத்துப் பெரிய ஆறுகள் போக்குவரவுக்கு ஏற்ற பாதையாயின. யாங்கிஸ்தியாங் என்னும் ஆற்றிலும் உவாங்கோ என்னும் ஆற்றிலும் மரக்கலங்களும் கப்பல்களும் 3000 மைல் செல்கின்றன. இத்தகைய போகபூமி மக்கள் தம் நாகரிகவாழ்க்கையை நடத்தற்கு ஏற்றது என்பது கூறாமலே அமையும்.

## சீனர்சாதி

சீனர் மஞ்சள்நிறத்தினரெனவும் வட்டமுகத்தினரெனவும் கருமயிரினரெனவும் அழகிய மூடிய இமையினரெனவும் கருவிழியினரெனவும் சிறப்பிக்கப்படுகின்றனர். ஆகலின் சீனர் துரேனிய கூட்டத்தினராதல் ஒழிய, மங்கோலியராதல் பொருந்தாது. சீனருடைய வடமேற்கெல்லையில் வசித்த மங்கோலியர் சீனத்தைக் கைப்பற்றி ஆண்டு சீனரோடு கலந்தமையால் சீனரைச் சிலர் மங்கோலியரெனக் கருதினரென ஒழிக. சீனர் தமிழரைப்போல் ஒரு தனிக்குழுவினராகவே வாழ்ந்தனர்.

## சீனர்மொழி

சீனர் கி. மு. 2697-ல் எழுதத்தொடங்கினரென ஆராய்ச்சி வல்லோர் மொழிகின்றனர். மூங்கிலில்தான் சீனர் எழுதப்பயின்றனர். கி. மு. 105-ல் சீனர் கடுதாசியில் எழுதுகோலால் எழுதத் தொடங்கினர். சீனருடைய எழுத்துக்கள் ஒலிக்குறிப்புக்களல்ல. சீனமொழியில் ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தில்லை. சீனவெழுத்து ஒவ்வொன்றும் ஒரு பதமாகும். சீனஎழுத்துக்கள் கீழிருந்து மேலாகவும் வலமிருந்து இடமாகவும் எழுதப்படும். சீனர் தம் பதங்களைக்கொண்ட அகராதி ஒன்றை கி. பி. 100-ல் இயற்றினர். சீனர் இலக்கிய இலக்கணங்களைக் கற்று இயற்கையாராய்ச்சியில் ஈடுபட்டனராயினும், தத்துவநூல்களை ஆராய்ந்திலர். அவருடைய சமயநூல்கள், சமயக்கிரியை வரவேற்பு விழா விருந்து தேரோட்டல் வில்வித்தை: முதலியவற்றை விரித்து விளக்குகின்றன. கி. மு. 2000 ஆண்டுகட்குமுன்னரே சீனத்தில் வெண்கலப்பாத்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. கி. மு. 1119-ல் பட்டுப்புடவைகள் நெய்யப்பட்டன.

## சீனர்கலை

பண்டைக்காலத்திலேயே சுவர்களிலும் கற்பாறைகளிலும், தேர்ப்போர் வேட்டையாடல் மீன்பிடித்தல் என்றாற்போன்ற காட்சிகள் சித்திரிக்கப்பட்டன. அப்படங்களில் யானை ஒட்டகம் குரங்கு முதலிய விலங்குகள் எழுதப்பட்டன. கி. மு. 20-ல் சிலைகளும்

சிற்பிகளால் அமைக்கப்பட்டன. இதுகாறும் கூறியவற்றால் சீனர் சீர்திருந்திய மக்களென்பதும் நாகரிகவாழ்க்கைக்குரிய கலைகளையும் வித்தைகளையும் ஓம்பினர் என்பதும் பெறப்படும். இனிச் சீனருடைய சமயவரலாற்றையும் அரசியல்வரலாற்றையும் சுருக்கிக் கூறுவாம்.

## சீனர்சமயம்

சீனர் பல தெய்வங்களைத் தொழுதனர் எனக் கூறமுடியாது. அவர்கள் ஆதிகாலந்தொட்டுத் தனிக்கடவுள் ஒருவர் உண்டெனநம்பியிருந்தனரெனச் சொல்லலாம். அத்தனிக்கடவுளை வழிபடுதற்குப் பூசாரிகள் தேவைப்படவில்லை. கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் தேயோமதமும் கன்பூசியமதமும் பரம்பின. பின்பு இவ்விருமதங்களும் குன்றப் புத்தமதம் நனிவளர்ந்தது.

## தேயோமதம்

தேயோமதம் லேயோறஸ் என்பவரால் நாட்டப்பட்டது. அவர் பிறந்த ஆண்டு கி. மு. 604. அவர் ஓதியவை வருமாறு. தனிநிலையாயுள்ள பொருள் ஒன்று உண்டு. அது ஒன்றே ஒன்றுதான் சத்து. அது சுத்தமானதும் நித்தமானதும். அந்த ஒன்றிலிருந்தே இரண்டு தோன்றின. அவ்விருபொருளும் ஆண் பெண் நியதியின்மை என முப்பொருளாயின. அம்முப்பொருட்களிலிருந்துதான் உலகத்துப் பல விகற்பப்பொருள்களெல்லாம் தோன்றின. இம்மதம் இந்துக்களுடைய சுத்தாத்துவித மதத்துடன் எத்துணை ஒப்புடையதென்பது ஆராயற்பாலது. இம்மதம் கல்லாமக்களைக் கவரத்தக்கதன்றாகலின் அழிவெய்தியது.

## கன்பூசியமதம்

கி. மு. 550ல் லிங்வாங்வம்சத்தினர் செங்கோலோச்சியகாலத்திலே லூநாட்டிலே கன்பூசியர் தோன்றினர். அவர் அரசாங்கசேவை செய்து கி. மு. 517-ல் அப்பதவியைத் துறந்தார். பின்பு அரசாங்கத்தின் கட்டிடங்களைப் பரிசோதனைசெய்யும் உத்தியோகத்தராய் அமர்ந்தார். பின்னர் ஓர் நீதிபதியாயினர். எதிலார் அவரை அப்பதவியினின்றும் நீக்கினர். அதன்பின் கன்பூசியர் சீனதேயம் எங்கும் திரிந்து ஞானோபதேசஞ் செய்தனர். அவர் கி.மு. 483-ல்

உயிர்நீத்தார். கன்பூசியர் கோயிலமைத்து வணங்கப்பட்டனர். கன்பூசியர் தத்துவங்களை ஆராய்ந்து பொழுதுபோக்கவில்லையென வும் நல்லொழுக்கத்தை நனி வற்புறுத்தினரெனவும் கூறுப. அவர் இறந்தபின் அவர் நுதலிய மதம் திரிபடைந்தது. அவருடைய சந்தானத்தில் சிறந்தோன் மேன்ஷி என்போன். இவன் கி. பி. 371-ல் பிறந்து பல நூல்களை இயற்றினன். அந்நூல்கள் கி. பி. 1083-ல் மிகவும் பாராட்டப்பட்டன. சீனர் தம் ஆழிவேந்தர் சூரிய சந்திர குலத்தோராதலின் தவறிழைக்கும் இயல்பினரல்ல ரென நம்பியிருந்தபோதிலும், மென்ஷி, ஆழிவேந்தர்கொற்றம் பிழைத்தால் அவரை அரசபதவியினின்றும் நீக்குதல் அவசியம் என வற்புறுத்தினர். இது நிற்க, கன்பூசியர் எழுதிய நூல்கள் பதினறு என்ப. ஒன்று மறுமையைப்பற்றிக் கூறுகின்றது. ஒன்று கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தவற்றைச் செப்புகின்றது. ஒன்று தேசிய கீதங்களை அடக்கியுள்ளது. மூன்றுநூல்கள் கிரியைகளை விளக்குகின்றன. ஒன்று சீனருடைய அரசியல்வர லாற்றை உரைக்கின்றது. ஒன்று கன்பூசியர்க்கும் சிஷ்யர்க்கும் இடையில் நடந்த சம்பாஷணையைக்கூறும். ஒன்று பெற்றுரைப் பேணலைப்பற்றியது. ஒன்று எசமானனுக்கும் பணியாளனுக்கும் உள்ள நட்பின் இயல்பை ஆராய்கின்றது. ஒன்று அரசியல் ஞானத்தை உணர்த்துகின்றது. ஒன்று கல்வியைப்பற்றியது. ஒன்று நிகண்டு. ஒன்று அறங்களை வரையறுக்கின்றது. ஒன்று சரித்திரநூல். தத்துவஞானி மென்ஷியும் தன் உபதேசத்தை ஒரு நூலாக வகுத்தான். கன்பூசியர் எழுதிய 16 புத்தகங்களும் கி. பி. 200-ல் மறைந்துபோயின. பின்னர் அவை ஆராய்ச்சி வல்லோரால் வெளியிடப்பட்டன. வெளிவந்த நூல்கள் சில குறை வாகவே இருக்கின்றன. சிலபகுதி சேதமடைந்தனபோலும்.

## புத்தமதம்

கி. மு. 126-ல் சாங்சியன் என்பவன் சீனர்க்குப் புத்தசமயத் தைப் போதித்தான். கி. பி. 61-ல் ஆழிவேந்தன் மிங்-தி தூதர் சிலரைக் கூவி இந்துநாட்டிற்குப்போய்ப் பிக்ஷுக்களையும் பௌத்த நூல்களையும் பெற்றுவரும்படி ஏவினன். இந்திய பௌத்தநூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. கி. பி. 385-ல் சீனர் பெருந்

தொகையினர் காவியணிந்து புத்தசங்கங்களை நிறுவத்தொடங்கினர். கி. பி. ஐந்தாம்நூற்றூண்டில் புத்தமத ஆராய்ச்சிசெய்த பெரியோன் பாகியன், மங்கோலியா ராட்டிமி இந்தியா இலங்கை என்னும் தேசங்களில் யாத்திரைசெய்தனன். சங் என்னும் வேந்தன் புத்தமதத்தைப் புரந்தனன். பின்பு ஹிசுவான்சாங் இந்தியா சென்று கி. பி. 637-ல் பௌத்தநூல்களை எடுத்து ஏகினன். அவை சீனமொழியில் பெயர்க்கப்பட்டன. அக்காலத்தில் சீனத்தில் 3716 பௌத்தமடங்கள் இருந்தன. கி. பி. 714-ல் பௌத்தர்கள் துன்புறுத்தப்பட்டனர். சின் வம்சத்தினனாகிய ஆழிவேந்தன் வூதி செங்கோலோச்சியகாலத்தில் அரசவையில் பௌத்தருக்கும் கன்பூசியருக்கும் வாதம் நடந்தது. வூதி அரசுதுறந்து வானப்பிரஸ்தனானன். கி. பி. 845-ல் ஆழிவேந்தன் வாசங் 4600 மடங்களை இடித்தான். அக்காலத்தில் பிக்ஷுக்களும் பிக்குணிகளுமாக 260,00 மக்கள் துறவறவாழ்க்கையை விடும்படி கட்டளைபெற்றனர். பின்பு கி. பி. 11-ஆம் நூற்றூண்டில் பௌத்தமதம் ஒருவாறு தலையெடுத்தது. ஹூணர்வேந்தன் குபிலைக்கான் பௌத்தமதத்தைத்தழுவித் தேயோமதத்தைக் கண்டித்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் சீனாவில் 42, 318 பௌத்தப்பள்ளிகள் இருந்தன. தாள்வு என்போன் தரைவழியாக இந்தியாவந்து பலநூல்கள்பெற்றுக் கடல்வழியாகத் தாய்நாடு திரும்பினான். கி. பி. 1600-ல் கன்பூசியமதத்தினர் அரசரைத்தூண்டிப் பௌத்தரைத் துன்புறுத்த எண்ணினர். வேந்தர் ஒருமதத்தினரையும் துன்புறுத்தவிரும்பவில்லை. கி.பி.1644-ல் மாம்சுவம்சத்து முதல்வேந்தன் ஷன்ஷி பௌத்தமதத்தைப் புரந்தான். அக்காலத்துப் பௌத்தரே சீனருக்கு ஒலியெழுத்துக்களை உணர்த்தினர். பௌத்தமதத்தைக் கற்றுக் கன்பூசியமதத்தினர் தம்மதத்தைத் திருத்தினர். ஆழிவேந்தர் பெரும்பாலும் பௌத்தமதத்தைத் தழுவினர். அவர் தம் சாச்சடங்குகளில் பௌத்தமதக்கிரியைகளையே செய்வித்தனர். சுவர்க்கலோகத்துக்கரைசேர்க்கும் ஓடக்காரனுக்கென இறந்தோர் வாயில் ஒரு காசு இடுதல் வழக்கம். பௌத்தமதம் இந்துநாட்டில் இந்துசமயத்துடன்கலந்து மறைந்தபோதிலும், சீனாதேசத்தில் பரம்பி நிலவுகின்றது.

## சீனர் அரசியல்

### ஆதிகாலம்

சீனருடைய கணக்கின்படி கன்பூசியர் என்னும் சமயகுரவர் பிறக்குமுன் 3,276,000 ஆண்டுகளுக்குமுன்தான் இப்பூவுலகு படைக்கப்பட்டதாகும். முதல்முதல் படைக்கப்பட்டான் பான்-கு என்பவன். அவன் அண்டம் என்னும் முட்டையில் பிறந்தான். அவனுடைய குமாரர் மூவரின் சந்ததியார் சுவர்க்கத்தையும் பூலோகத்தையும் ஆளுகின்றனர். பூஹி ஆண்டகாலத்திலே கி. மு. 2850-ல் மனிதர் சமையல்செய்து உண்ணவில்லை. ஆடவர் ஒரு பெண்ணுடன்கூடி, குடும்பமாக வாழவில்லையாகலின், அக்காலத்தவர் தம் தந்தைகளை அறியாது தாய்மாரோடேயே வாழ்ந்தனர். வேந்தன் பூஹி வேட்டையாடல் மீன்படுத்தல் பட்டிமேய்த்தல் என்னும் தொழில்களைக் கற்பித்தான். அவன் மஞ்சள்நதியிலிருந்து எழுந்த பாம்புக்குதிரையிடம் சிலவரைதல்களைப்பெற்று எழுத்துக்களைக் கற்பித்தான் என்ப. அவனுடைய தலைநகர் மோஹனன் தேசத்துள்ள கைபெங்பூ என்பது. அவன்பின் தலைமைவகித்த ஷேன்னங்கு (கி. மு. 2737—2697) ஏர்பூட்டி உழுதலைக் கற்பித்தான். அவன் மூலிகைகளை ஆராய்ந்து மருத்துநூல்களை எழுதினன். அவன்பின் அரசுசெலுத்திய கு-வாங்-தி (கி. மு. 2597) மரத்தாலும் மண்ணாலும் உலோகங்களாலும் கலன்கள்செய்யும் முறைகளைக்காட்டினன். ஓடங்களும் வண்டிகளும் அக்காலத்திலேதான் செய்யப்பட்டன. பட்டுநூலாடையும் நெய்யப்பட்டது. இவ்வளவில் ஆதிகாலத்து வரலாறு முற்றிற்று.

### ஹீசியவம்சம்

கி. மு. 2887-ல் செங்கோலோச்சிய ஏவோ என்பவன் தன் மகனுக்கு இராச்சியத்தை அளிக்கவில்லை. அவன் ஷன் என்பவனே அரசபதவிக்குத் தகுந்தோன் எனக் கண்டு அவனுக்கே முடியை அளித்தான். அவனுடைய தலைநகர் பிங்யாங்பு. ஹீசிய வம்சத்தினர் கொடுங்கோலோச்சியமையால் சலப்பிரளயங்கள் நிகழ்ந்தன என்ப. மஞ்சள்நதியின் வெள்ளத்தால் தலைநகர் ஏழுமுறை இடம் மாற்றப்பட்டது. கி. மு. 2205-ல் யூ என்னும் வேந்தன்

சீனதேயத்தின் பெரும்பகுதியை ஒருகுடைக்கீழ் ஆண்டான். ஹீசியவம்சத்தினர் பதினெண்மர் ஆண்டனர். அக்காலத்தில் வான நூலோர் கிரகணம் ஒன்றைக் கணக்கிட்டறியாமையால் தண்டிக்கப் பட்டனர். ஹீசியவம்சத்துக் கடைசிவேந்தன் சோசின் பெருங் காமியாகலின் குறுநிலமன்னரால் கொல்லப்பட்டான்.

### தனிக்கோலன் பா

கி. மு. 1122-ல் சோநாட்டுப் பா என்னும் மன்னன் அரசு கட்டிலேறினன். அவனுடைய தந்தை சாங் என்பான் சோசின் என்பானுடைய குற்றங்களைக் கண்டித்தானாகலின், சிறையிடப்பட் டிருந்தான். பா தன் பட்டப்பெயராகத் தனிக்கோலன் எனப் பொருள்படும் உவாங் என்னும் பெயரைச் சூடினன்; தன் உடன் பிறந்தோனுக்கு அமைச்சுப்பதவியை நல்கினன். சோசின் என் பானைக் கொல்லுதற்கு உதவிபுரிந்த நண்பர்களுக்கு நிலங்கள் அளித்தான். அவனுடைய ஆட்சியிலேதான் முதன்முதல் கொலை நடந்ததென்ப. கி. மு. 1038-ல் ஹூ என்னும் குறுநிலமன்னன் தன் சகோதரனால் கொல்லப்பட்டான். ஆழிவேந்தன் அக்கொலை செய்தோனைத் தண்டிக்கும் ஆற்றல் இல்லாதிருந்தான். கி. மு. 1001 முதல் 947 வரைக்கும் மின்வாங் என்பான் ஆழியுருட்டினன். அவன்காலத்தில் தண்டனையாகப் பொருளிறுக்கவிதிக்கும் வழக்கம் தொடங்கியதாக, ஒழுக்கம் குன்றியதென்பர்.

### யங் என்னும் கானவர்

கி. மு. 946-ஆம் ஆண்டுக்கும் கி. மு. 770-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆறுவேந்தர் ஒருவர்பின் ஒருவர் ஆண்ட னர். அன்னியர் சீனவைப்பிடித்தற்குப் படையெடுத்தனர். அவர் யங் என்னும் சாதியார். ஆழிவேந்தன் தன் மகனுக்கு உரிமையை மறுத்துத் தன் காமக்கிழத்தியின்மகனுக்கு அரசை அளிக்க எண்ணினனாக, குடிகள் யங் என்னும் சாதியாரின் துணையோடு பகைத்தெழுந்து ஆழிவேந்தனைக் கொன்றார்கள். கி. மு. 770-ல் கானவர் ஒருவாறு துரத்தப்பட்டனர். பிங்வாங் என்பான் கானவ ருக்கு அஞ்சியிருந்தகாலத்தில் குறுநிலமன்னர் ஆழிவேந்தனுக்கு அமைந்தொழுகவில்லை. குறுநிலமன்னர் பலமுறைபடையெடுத்துக்

கலகம்விளைத்தனர். கி. மு. 770 முதல் கி. பி. 220 ஈறானகாலத்தில் சீனர் சமயஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அக்காலத்திலேதான் கன்பூசியர் லேயோறஸ் மென்ஷி என்போர் ஞானோபதேசஞ்செய்தனர்.

சின்வம்சம்

கி. மு. 200-ல் சின்வம்சத்தினர் ஆளத்தொடங்கினர். வேந்தன் ஷி உவாங் தி இராச்சியத்தைப் பல மாகாணமாகப் பிரித்து, அரசியலை நடாத்தினன். சமயக்கல்வியைச் சனங்கள் போற்றினராகலின், அவன் படைப்பயிற்சி குன்றுமென எண்ணினன். தன் அரசைக் காத்தற்குப் புத்தகங்களை எரித்தல் அவசியமென எண்ணிச் சமயநூல்கள் பலவற்றை எரித்தான்.

மருத்துநூல்களும் எதிர்கால சாஸ்திரநூல்களும் பயிர்நூல்களும் மென்ஷி எழுதிய நூல்களும் எரிக்குத் தப்பின. கன்பூசிய மதத்தினர் ஆழிவேந்தரை விரோதித்துக் குறுநிலமன்னருக்குத் துணைபுரிந்தமையால் துன்புறுத்தப்பட்டனர். எரியில் இடுதற்குப் புத்தகங்கொடாத 460 அறிஞர் உயிரோடு புதைக்கப்பட்டனர். அமைச்சன் லிசு அறிஞரைத் துன்புறுத்தும்படி புத்தியுரைத்தனன்.

[தொடரும்.]

# திருநாங்கூர்

இவ்வூர் தஞ்சாவூர்ஜில்லா சீகாழித்தாலூகாவில் உள்ளது. தென்னிந்திய இருப்புப்பாதையில் சீகாழி என்கிற ஸ்டேஷன் (நீராவிப்பொறித் தொடர்நிலையத்தில்) இறங்கிச் சாலைமார்க்கமாய்த் தென்கிழக்கே ஏழெட்டுக் கற்கள் சென்றால் இத்தலத்தை அடையலாம். வைத்தீசுவரன்கோவில் எனும் நிலயத்தில் இறங்கிக் கிழக்கே ஐந்தாறு கற்கள் சென்றாலும் இதனை அடையலாகும். இவ்வூர் நாங்கை எனவும் மருவிவழங்கும்.

இதன்கண் திருமங்கையாழ்வாராற் பாடப்பெற்ற பதினொரு திருமால்திருப்பதிகள் உள. அவற்றின் பெயர்களாவன:—

1 மணிமாடக்கோவில் (நாராயணசுவாமிகோவில்)[1]
2 வைகுந்தவிண்ணகரம்
3 அரிமேயவிண்ணகரம் (குடமாடுகூத்தர்கோவில்)
4 திருத்தேவனார்தொகை (கீழச்சாலை)
5 வண்புருடோத்தமம்
6 செம்பொன்செய்கோவில்
7 திருத்தெற்றியம்பலம் (பள்ளிகொண்டபெருமாள்கோவில்)
8 திருமணிக்கூடம்
9 திருக்காவளம்பாடி
10 திருவெள்ளக்குளம் (அண்ணன்கோவில்)
11 திருப்பார்த்தன்பள்ளி

இது நாலாயிரப்பிரபந்தத்திற் கண்ட வரிசையே.

இப்பதினொன்றனுள், செம்பொன்செய்கோவில் நாங்கூரின் 'நன்னடுவுள்' இருப்பது என்று அப்பதியைப்பற்றிய திருமங்கை மன்னன்பதிகம் கூறுதற்கேற்ப, அப்பதிகமும்[2] இவ்வூர்க்குரிய பதினொருபதிகங்களின் நன்னடுவே நாலாயிரப்பிரபந்தத்துள்

---

[1] ( ) இங்ஙனம் நகவளைவுக்கோடுகட்குள் கொடுக்கப்பட்டவை இப்போது வழங்கும் பெயர்கள்.

[2] பெரியதிருமொழி 4. 3.

அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பதிகத்து எட்டாவதுசெய்யுளின் ஈற்றடி,[1] இப்பதியே ஊர்நடுமன்றத்து அமைந்ததாகும் என்பதை விளக்கிநிற்கிறது. திருத்தெற்றியம்பலம் என்ற திருப்பதியும் அம்பலம் எனப் பெயர்பெற்றிருத்தற்கேற்ப, ஊர்நடுவே காணப்படுதல் குறிக்கொளத்தகும்.

1, 2, 3, 5, 6, 7 ஆகக்குறித்த திருப்பதிகள் இப்போது நாங்கூர் என வழங்கும் உள்ளூரிற் காணப்படுகின்றன. மற்றவை உள்ளூரிலிருந்து இரண்டொருகற்கள் தொலைவில் நானுபக்கத்தும் உள்ளன.

இவ்வண்ணமே, இவ்வூரில் சிவபெருமானுக்குரிய கோவில்கள் பலகாணப்படுகின்றன.[2] இவற்றைப்பற்றித் தனித்தனிப்பதிகங்கள் தேவாரத்துட் காணப்படவில்லையென்றாலும், சுந்தரமூர்த்திநாயனுர் அருளிச்செய்திருக்கும் திருநாட்டுத்தொகை என்ற பதிகத்து நான்காஞ்செய்யுளினும், திருவூர்த்தொகை என்ற பதிகத்து ஆருஞ்செய்யுளினும் முறையே "நாங்கூர்நாட்டு நாங்கூர்" எனவும், "நாங்கூர் உறைவாய்" எனவும் இதனைப் பேசியிருப்பதிலிருந்து இது ஒரு பெரிய சிவக்ஷேத்திரமுமாகும் என்பது வெள்ளிடைவிலங்கலே.

சிவபெருமானுக்குரிய கோவில்களுள், திருவேண்காடு என்ற கற்றளி ஒன்றே இன்றும் மிகவும் பிரபலமாய்விளங்குகிறது. இத்திருவெண்காட்டைப்பற்றிச் சமயகுரவர் மூவரும் பாடிய பதிகங்கள் தேவாரத்துட் காணப்படுகின்றன. மற்றைக்கோவில்களைப் பற்றிய பதிகங்கள் இறந்துவிட்டனபோலும்.

மேற்கூறிய திருவெண்காடு நாங்கூரைச்சேர்ந்தது என்பது அக்கோயிலிற் காணப்படும் கல்வெட்டுக்களால்[3] அறியக்கிடக்கின்றது. இச்சாஸனங்களுள் பல இடங்களினும் "வடகரை

---

[1] 'மன்றதுபொலியமகிழ்ந்துநின்றனை வணங்கினான்வாழ்ந்தொழிந்தேனே'

[2] இச்செய்தி இவ்வூர்க்குரிய வடமொழி ஸ்தலபுராணத்திலும் கூறப்படுகிறது. இப்புராணம் இன்னும் அச்சிடப்பெருததொன்று. பராசவன புராணம் எனும் மற்றொரு புராணம், இவ்வூரில் 12 சிவபிரான்கோவில்கள் உண்டு என்று பரக்கப் பேசுகிறது.

[3] S. I. I. Vol. v. (974—987.)

ராஜேந்திரசிங்கவளநாட்டு நாங்கூர்நாட்டு நாங்கூர்த் திருவெண்காடுடையார்" எனப் பயின்றுவருதல் காணலாம். மேற்குறித்த சாஸனங்கள் சிலவற்றுள் "ராஜாதிராஜவளநாட்டு நாங்கூர்நாட்டு நாங்கூர்த் திருவெண்காடு" என்றும் காணப்படுகிறது. எனவே, நாங்கூர்நாடு அடங்கிய வளநாட்டிற்கு வடகரை ராஜேந்திரசிங்க வளநாடு என்றும் ராஜாதிராஜவளநாடு என்றும் பெயர்வழக்குண்மை அறியலாகும்.

நாங்கு[1] என்ற மரவகையை மிகுதியும் உடைமைபற்றியே இவ்வூர்க்குப் பெயரமைந்திருக்கிறது எனக் கருதல் பொருந்தும். தெற்கே, நாங்குநெறி[2] என வழங்கும் ஊர்ப்பெயரும் இக்காரணம் பற்றியே எழுந்திருத்தல்வேண்டும். தெங்கூர், தில்லை, பாதிரிப் புலியூர் போன்ற பெயர்கள் மரங்களால் ஊர்கள் பெயர்பெறும் வழக்குண்மையைத் தெள்ளிதிற் காட்டும்.

நாங்கூர்க்கு நாகபுரி எனவும் பலாசாரண்யம் எனவும் பெயர்கள் உண்டு. இவை வடமொழி ஸ்தலபுராணத்திற் பயில்வன. இவ்வூரிலுள்ள பதினொரு திருமால்மூர்த்தங்களையும் திருமங்கை மன்னனுடன்சேர்த்து, ஸ்ரீ. மணவாளமாமுனிகள் மங்களாசாசனம் செய்த கீழ்க்கண்ட சுலோகத்தாலும் இவ்வூர்க்கு நாகபுரி எனப் பெயருண்மை அறியக்கிடக்கிறது. அச்சுலோகம் பின்வருமாறு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

இச்சுலோகத்தாற் குறிக்கப்பட்டார் முறையே,—

---

[1] Mesna (Madras University Tamil Lexicon. p. 2201). இதுவே பலாச (பராச) விருக்ஷம்போலும்.

[2] நான்கு கூன் ஏரி — என இப்பெயராகுஞ்சொற்கள் மூன்று என்றும், நான்கு விளைந்த ஏரிகளையுடைமையால் இப் பெயர் வந்தது என்றும் கூறுவார் உளர் எனினும், யான் கூறுவதே பொருத்தமுடைத்து எனத் தோன்றுகிறது.

மணிமாடக்கோவில்—நந்தாவிளக்குப்பெருமாள்
அரிமேயவிண்ணகரம் — குடமாடுகூத்தர்
செம்பொன்செய்கோவில் — பேரருளாளன்
திருத்தெற்றியம்பலம் — செங்கண்மால்
திருவெள்ளக்குளம் — ஸ்ரீநிவாஸன் (நாராயணன்)
வண்புருடோத்தமம் — புருஷோத்தமன்
திருமணிக்கூடம் — வரதராஜன்
வைகுந்தவிண்ணகரம் — வைகுந்தநாதன்
திருத்தேவனார்தொகை — மாதவப்பெருமாள்
திருப்பார்த்தன்பள்ளி — தாமரையாள்கேள்வன்
திருக்காவளம்பாடி — கண்ணன்
கலித்வம்ஸி — ஸ்ரீ. திருமங்கைமன்னன் என்பவராவர்.

நாங்கூர்நாடு என்பது மண்ணியாற்றுக்குத் தெற்கு, காவிரிப் பூம்பட்டினத்துக்கு மேற்கு, காவிரிக்கு வடக்கு, சீகாழி-தரங்கம் பாடிச்சாலைக்குக் கிழக்கு ஆகிய நான்கெல்லைக்குட்பட்ட நிலப் பரப்பு என ஒருவாறு கூறலாம்.

காவெய-ிாஷ்வாத்ரெ தீரெஷ்வதாரண்யஸ்யவஸீஜெ ।
வஷாஶவிவிநஂநாஜ வ ்ணாயாஶுஜ ஸஜஂ ஹ்வி ॥

என்பது நாங்கூர் வடமொழிஸ்தலபுராணம் முதல் அத்தியாயம் நான்காவது சுலோகம்.

"நாங்கை நாலாயிரம் தில்லை மூவாயிரம்" என்ற பெருவழக்கி லிருந்து இந்நாங்கூர்நாட்டில் நாலாயிரம் பிராமணக்குடிகள் இருந் தன என்றும், அதற்கேற்ப மற்றைக்குடிகளும் இருந்தன என்றும் அறியக்கிடக்கிறது. ஆயின் நாங்கூரின்பரப்பினை ஒருவாறு ஊகித் தறியலாமன்றே. தற்காலம் மிகுதியான வீடுகளின்றியும் மக்கட் கூட்டமின்றியும் இந்நாடு காணப்படினும், ஏராளமான வீடுகள் இருந்ததற்கு அடையாளமாக எங்கும் ஓட்டாஞ்சில்லிகளும் செங் கற்களுமே காணப்படுகின்றன. நீர்வளத்தாலும்[1] நிலவளத்தாலும்

[1] பொன்னி என்றே ஆழ்வாராற் பாடப்பட்ட (பெரிய திருமொழி– 3. 8. 3). ஐயாவையனாறு இவ்வூருட்புகுந்து வளம்படுத்திச்செல்கிறது. சோழ அரசன்கீழ் அதிகாரியாயிருந்த திருவெண்காட்டு ஐயாவையன் என்பார் வெட்டிவைத்ததனால், இவ்வாறு இப்பெயர் பெற்றதென்பர்.

அந்தணர்குடிகளாலும் விளக்கமுற்றிருந்த இந்நிலையை ஆழ்வார் பதிகங்கள் பாசுரந்தோறும் தெரிவித்துநிற்றலை அப்பதிகங்களை ஓதினாறிவர்.

இவ்வூரின்கண் ஆழ்வார்க்குள்ள ஈடுபாடு ஒப்புயர்வற்றது. இவ்வூரே அவர்க்கு நாயகியை அளித்துதவியது என ஞாபகப் படுத்திக்கொள்ளற்பாற்று.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியலில் "மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப" என்ற முப்பதாவது சூத்திர வுரையில், நச்சினார்க்கினியர், "அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களும் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும்.........முதலிய பதியிற்றோன்றி வேள் எனவும், அரசு எனவும் உரிமை எய்தினோரும்...........முடி யுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராகுப. உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர்வேளிடை மகட்கோடலும் அவன் மகனாகிய கரிகாற்பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட் கோடலும் கூறுவார்." என எழுதிப்போவதினின்று இவ்வூர் வேளாளரின் பழமை பெருமை தெரியலாகும்.

திருவெண்காட்டடிகள் என்ற பட்டினத்துப்பிள்ளையார்க்கு முதற்சீடரும் மந்திரியுமாய சேந்தனார் இந் நாங்கூரினர். இது, சேந்தனாரைச் சிறைச்சாலையினின்று விடுவிக்கப் பட்டினத்துப் பிள்ளையார்பாடிய,

> "மத்தளை தயிருண் டானும் மலர்மிசை மன்னி னானும்
> நித்தமுந் தேடிக் காணா நிமலனே அமல மூர்த்தி
> செய்த்தலைக் கயல்பாய்.........நாங்கூர்ச் சேந்தன்
> கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டு ளானே."

என்ற பாட்டால் அறியலாகும்.

சோழர்க்குரிய கடற்கரைத்தலைநகராகிய காவிரிப்பூம்பட்டி னம் என வழங்கும் புகார்க்கு நாங்கூர் பண்டசாலையாய் விளங்கிற்று என்று பலரும் அங்கு வாயாரவழங்குகின்றனர். ஊரின் அமைப்பை யும் புகார்க்கு அணித்தாயிருத்தலையும் கூட்டிநோக்குமிடத்து இது உண்மையென்றே கொள்ளத்தகும்.

பெரியதிருமொழியுட்காணப்படும் இவ்வூர்ப்பதிகங்களில் போர் வீரர்சிலரைத் திருமங்கைமன்னன் புகழ்கிருர். அத்தொடர்கள்,

1 மாவருந்திண் படைமன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கூர் (4-1-2)
2 திண்டிறலார் பயில்நாங்கைத் திருத்தேவனுர் தொகையே (4-1-5)
3 ஒண்டிறல் தென்ன னேட வடவர சோட்டங் கண்ட
திண்டிற லாளர் நாங்கூர்த் திருமணிக் கூடத்தானே. (4-5-6)
4 துன்னென மாற்ருர்தம்மைத் தொலைத்தவர் நாங்கை (4-6-2)
5 நண்ணூர்முனை வென்றிகொள்வார் மன்னுநாங்கூர் (4-7-1)

என்பனவாம்.

இத்தொடர்களாற் குறிக்கப்பட்டார் இவ்வூர்ப் பிராமணர் என்று ஸ்ரீ. பெரியவாச்சான்பிள்ளை உரையிட்டிருப்பது சரித்திர ஆராய்ச்சிக்குப் பொருந்துவதன்று. மேற்கண்ட முதற்ருெடர்க்கு உரையிடுங்கால் "உடையபிள்ளை என்கிறவன், அங்குத்தை ஆலயத்தைக் கவிபாட என்று வர, அவனை எதிரேசென் றடித் தோட்டிப்பின்னைப் பாடப்பெருதே போந்தான் என்ருெருப்ரஸித்தி யுண்டிறே" என்று ஞானசம்பந்தர் திருநாங்கூர்ச் சிவபிரான்கோவில் ஒன்றன்பேரில் பதிகம்பாடவருகையில், அவ்வூரார் அவரை அடித்தோட்டிவிட்டனர்: என்று தாம் கேட்டிருந்த கதை ஒன்றனை யும் சந்தர்ப்பத்துக்கு ஏற்காமலேயே குறிப்பிடுகிருர்.

மேற்கண்ட தொடர்கள் இவ்வூர்ப் படையாட்சிமார்களையே குறிக்கும். அவர்கள்குடி இவ்வூரின் மிகுந்துகாணப்படுகிறது. அவர்கள் இன்றும் உயர்ந்த கட்டமைந்த வடிவுடையராகவும் அஞ்சாநெஞ்சினராகவும் விளங்குகின்றனர். 'மேற்கண்ட தொடர் களில் 'மன்னு' 'பயில்' என்ற சொற்களால் ஆழ்வார் இவ்வீரர்களது அற்புதப் போர் ஒன்றினை நேரிற்கண்டு புகழ்கின்ருர் என்பது போதரும்' என ஸ்ரீ ராவ்சாகிப். மு. இராகவையங்கார்சுவாமி அபிப்பிராயப்படுகிருர்;[1] 'அப்போர்தானும் முதல்விக்கிரமாதித்தனை யும் பாண்டியனையும் பரமேசுவரப்பல்லவன் வென்ற பெருவள

[1] Dr. S. Krishnaswami Aiyangar's commemoration volume. "The contemporareity of Saints Tirumangaiyar and Gnana sambanda" (p p 201—211).

MADRAS TAMIL

நல்லூர்ப்போரே' என்றும் அவர் கூறுவர். இதன் உண்மை இன்னும் ஆராயத்தக்கது.[1]

சோழராஜாங்கத்துக்குரிய பெரிய படையாட்களும் படைத் தலைவர்களும் இவ்வூரில் வைக்கப்பட்டிருந்தனர் எனக் கொள்ளத் தட்டில்லையே. சோழர் புகார்க்கு அடுத்துள்ள இவ்வூரில் அவரது படையும் பண்டசாலைகளும் இருந்தன எனக்கொள்ளுதலில் தடையென்ன? சோழராஜ்யத்தினிமித்தம் எங்குப் போர்நிகழ்ந்தாலும், இப்படைவீரர்சென்று போர்புரிதல் வழக்கமாயிருந்திருக்கிறது. சோழ அரசின்கீழ்ச் சிற்றரசராகவிருந்த ஆழ்வார் தம் தலைமையில் இப்படைவீரரை அழைத்துச்சென்று பல போர்கள் புரிந்திருக்கவேண்டும்.[2] இதனை மனத்திற்கொண்டன்றே ஆழ்வார் பெருவீரராய தம்மையும் வியக்கச்செய்யும் இவ்வீரர்பெருமையைப் பேசுகிறார்!

இன்னும் இவ்வூரில் மணிமாடக்கோவிலுக்கு எதிரில், எல்லைக் கல் என்றும் சாவான்கல் என்றும் ஊரார் வழங்கும் கருங்கற் சிலையொன்று நம் கவனத்துக்குரியதாயுளது. இது, காற்று மழை வெயில் எல்லாவற்றாலும் பீடிக்கப்படும்படி கோயிலொன்றுமின்றித் திறந்த இடத்தில் நடப்பட்டிருக்கிறது. இதில் மனிதவடிவமொன்று

---

1 விக்கிரமாதித்தன், காவிரிக்குத் தென்கரையில் உரகபுரத்தே கொஞ்ச நாள் தங்கியிருந்து கத்வால் பட்டயக்கண்டான் என்று கூறப்படுகிறது. இவ்வுரகபுரம் உறையூர் என்பாரும் நாகபட்டினம் என்பாரும் உளர். ஆயினும், நாகபுரமெனினும் உரகபுரமெனினும் ஒக்குமாதலானும், நாகபுரம் (நாகபுரி) என்ற பெயர்வழக்கு நாங்கூர்க்கு உண்மையானும், காவிரி என்பது கொள்ளிடத்தைக் குறிக்கக்கூடுமாதலானும் நாங்கூரே உரகபுரமாகும் என்று தோற்றுகிறது. இச்செய்தி நல்லறிஞர் ஆராய்ச்சியால் உறுதிபெறநிற்பது.

2 ஆழ்வார் பிறந்த ஆலிநாட்டுத் திருக்குறையலூரும் ராஜ்யபாரம் நிர்வகித்த மங்கைமடமும் நாங்கூர் எல்லையிலிருந்து (நாங்கூர்—திருவெண்காடு ரஸ்தாவிலிருந்து) ஒருகல் தொலைவிற்குள் இருப்பதும் இச் செய்தியை வலியுறுத்தும். மங்கைமடம் என இப்போது வழங்கும் திருமங்கையிலிருந்து அரசாண்டகாரணத்தால் இவ்வாழ்வார்க்கு மங்கைமன்னன் என ஒரு பெயர் வந்தது. இம் மங்கைமடத்தைப்பற்றித் தனியே ஒரு கட்டுரை வெளியிடக்கருதியிருக்கிறேன்.

தன்கழுத்தை அரிந்துகொள்ளும் கோலம் வலதுகையில் கத்தியுடன் செதுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி ஊரார் பலபலவிதமாக ஐதிஹ்யம் கூறுகின்றனர்.[1] தலைப்பலிகொடுக்கும் ஒருவரது வடிவமே அது என்று கோடலே பொருந்துவதாகும்: எனத் தோற்றுகிறது.

இக்கல்லின் எதிரில் ஆண்டிற்கு ஒருமுறை படுகளம் எனும் விழவினைக் கொண்டாடுகிறார்கள். அப்போது இக்கல்லின்பக்கத்தே ஊரில் உள்ள காளியம்மன், செல்லியம்மன் முதலிய விக்ரகங்களை எழுந்தருளப்பண்ணுவிக்கின்றனர். பிரார்த்தனைசெலுத்தக்கடவார் இக்கல்லின்முன் இரவுமுழுதுமே தூங்காது படுத்துக்கிடப்பர். இச்சிலையை இவ்வூரிலுள்ள செங்குந்தர்வகுப்பினரே (கைக்கோளரே) சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர்.

முடிவில், இவ்வூரில் தைமாதத்தில் நடக்கும் கருடசேவையைப்பற்றிக் கூறுமலிருக்கமுடியாது. ஆண்டுதொறும் தைஅமாவாசையன்று திருவாலிதிருநகரியிலிருந்து திருமங்கைமன்னனது அர்ச்சாவிக்ரஹத்தை நாங்கூருக்கு எழுந்தருளப்பண்ணி, மறுநாள் பதினொருதிவ்யதேசத்து எம்பெருமான்களையும் மணிமாடக்கோவிலில் எழுந்தருளப்பண்ணிவைத்து, ஒவ்வொரு பெருமாளையும் ஆழ்வார் மங்களாசாஸனம்செய்துமுடிந்தபின் அன்றிரவில் எல்லாத்திருமால்களும் கருடாரூடராய், அன்னவாகனத்தில் எழுந்தருளும் ஆழ்வாரை முன்னிட்டுக்கொண்டு இவ்வூரின் விசாலமான வீதிகளை வலம்வரப்பண்ணுவிக்கும் பதினொருகருடசேவை என வழங்கும் திருவிழாக்காட்சி யாவர்கண்ணுக்கும் பெருவிருந்தாகும். திருக்குருகூரில் நடக்கும் நம்மாழ்வார் உற்சவத்தைப் போன்றே இங்கும் நடத்தத்தொடங்கிச் சுமார் 50 ஆண்டுகளாக இது நடந்துவருகிறது. திருக்குருகூரில் ஒன்பதுகருடசேவை மட்டில். இதிலோ பதினொருகருடசேவை.

மேற்கூறியவற்றால், இவ்வூரின்பழமைபெருமைகள் விளங்கும்.

ச. ஸ்ரீநிவாஸையங்கார்.

---

[1] இதன் உண்மைவரலாறு என்னல் இன்னும் ஆராயப்பட்டுவருகிறது. முழுச்செய்திகளும் விளங்கக்கண்டபின் வெளியிடுவேன்.